

நன்மையில் நன்றி துன்பத்தில் துதி

பால்ராஜ் அதிசயமணி

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Grateful in
Goodness
Praising in
Persecutions

A Commentary on :
The Book of Job

By
Rev. Dr. C. Paulraj Athisayamony

© Paulraj Athisayamony, 2008.

A/103 Green View, Patel Complex,
Mira Gaon, Mumbai-401104, India.
Tel.: +91 9969637077

www. pam-books.blogspot.com
Email: pambooks@yahoo.com

Cover Photo:
Job's tomb, Salalah, Oman.
Taken by :
Augustine, Salalah, Oman.

Printed at:
Morris Commercial Printers, Mumbai -400 017.

Sponsored by.
Daniel, Sheba, Judah & Jael, Muscat, Oman.

விபரம், *14*

விசுவாசம், *15*

வியாகுலம், *34*

விவாதம், *37*

விளக்கம், *56*

விசனம், *58*

விமோசனம், *59*

வியாக்கியானம், *61*

1. விபரம்

இவ்வாண்டு முதல் மாதம் ஓமான் தேசத்திற்கு ஊழியத்திற்காக அழைக்கப்பட்டிருந்தேன்.

அங்கு சலாலா என்ற இடத்தில் ஒருமலைப்பகுதியில் யோபுவின் கல்லறையிருக்கிறது.

அநுதினமும் பன்னாட்டுப் பயணிகள் யோபுவின் கல்லறையைப் பார்வையிட வருகின்றனர்.

கல்லறை அறையில் முழங்கால்படியிட்டு ஜெபிக்கின்றனர்; காணிக்கைச் செலுத்துகின்றனர்; யோபுவின் காலடித் தடங்களைக் கவனமாகப் பாதுகாத்து வைத்திருக்கின்றனர்.

ஓமானியர் பாதுகாப்பில் அவர்களுடைய ஒரு பகுதியைப்போட்டு அவர்களால் "அயூப்" என்று அழைக்கப்படும் யோபுவின் கல்லறை அமைந்திருக்கிறது. அதுவே இந்நூலின் அட்டைப்படம்.

யோபு ஒரு சரித்திரப் புருஷனா?

யோபுவின் சரித்திரம் என்பது இத்திருமறை நூலின் தலைப்பு.

ஊத்ஸ் தேசம் அவனுடைய சொந்த நாடு. 1:1. தெற்கு ஏதோமின் கிழக்கே அமைந்துள்ளது அத்தேசம். எரே. 25:20; புல. 4:21. நோவாவின் குமாரனாகிய சேமின் பேரன் ஊத்ஸ். ஆதி. 10:23. அந்நாட்களில் ஆட்களின் பெயர்களாலே அந்தந்த இடங்கள் அழைக்கப்பட்டன. "கிழக்கத்திப்புத்திரர் எல்லாரிலும் அவன் பெரியவனாயிருந்தான்" 1:3.

"கிழக்கு" என்றால் எந்த இடத்திலிருந்தது?

யூதர் குடியிருப்புக்கு எந்தெந்த இடங்களெல்லாம் கிழக்கிலிருந்ததோ, அந்தந்தயிடங்களெல்லாம் கிழக்கு என்று அழைக்கப்பட்டது. ஆதி. 29:1. ஏதோமுக்குக் கிழக்கே ஊத்ஸ் இருந்ததென்று வேதம் கூறுகிறது. ஆதி. 10:23; 36:28; எரே. 25:20; புல. 4:21. அது வட மேற்கு அரேபியாகவும், சவக்கடலுக்கு 150 மைல் கிழக்காகவும் அமைந்திருந்ததாக ஆராய்ச்சிகள் அறிவிக்கின்றன. யாக்கோபின் குமாரனாகிய இசக்காரின் குமாரன் யோபு. ஆதி. 46:13.

யோபு ஓர் ஏதோமியனாக இருக்கலாம் என்பது சிலரது கருத்து. ஊத்ஸ் என்பவன் ஏசாவின் சந்ததியான்; ஏசா ஏதோமியரின் தகப்பன். ஆதி. 36:28; 1 நாளா. 1:42; புல. 4:21, 22.

யோபுவின் நண்பர்கள் ஏதோமிலிருந்து வந்தார்கள். தேமான் ஏதோமிலுள்ளது; எலிப்பாஸ் தேமானியன். 4:1. ஆதியாகமம் 36:10,15 "ஏசாவின் குமாரருடைய நாமங்களுமாவன: ஏசாவின் மனைவியாகிய ஆதாளுடைய குமாரனுக்கு எலிப்பாஸ் என்றுபேர்... எலிப்பாசின் குமாரர், தேமான்..." என்று குறிப்பிடுகின்றன.

ஏசாவின் சந்ததியை யேகோவா வெறுத்துவிடவில்லை. அச்சந்ததியும் மெய்த்தேவனை அறிவர்; அவர்கள் விசுவாசம் முழுமையாக அல்லாமல் பழுதடைந்திருக்கலாம். பழுதடைந்த விசுவாசக் கோட்பாடுகளை யோபுவின் நண்பர்களில் பார்க்கலாம். யோபு ஏதோமில் வாழ்ந்த ஒரு யூதன் என்பது பெரும்பான்மையான வேதப் பண்டிதரின் யூகம்.

நிச்சயமாக, யோபு முற்பிதாக்களின் காலத்திலிருந்தவன்; மோசே காலத்திற்கு முந்தியவன்; வாக்குத்தத்தக் காலத்தில் வாழ்ந்தவன்.

நோவா, தானியேலோடு யோபுவையும் வரலாற்றுப் புருஷராக இணைத்துச் சொல்கிறான் எசேக்கியேல். 14:14,20. நோவாவும், தானியேலும் சரித்திரப் புருஷர் என்றால் யோபுவும் சரித்திரமே! யோபு என்றோர் தலைவர் இருந்ததாக எகிப்தில் சில ஏடுகள் எடுத்துக் காட்டுகின்றன. யோபுவின் பொறுமையைக் குறித்து யாக்கோபும் வியந்து விளக்குகிறான். 5:10-11.

ஆசிரியர்

யோபுவின் சரித்திரத்தை யோபுவே எழுதியிருக்கலாம் என்பது பாரம்பரிய நம்பிக்கை; அதை எழுத அவனுக்குப் பூரண வயது இருந்தது. 19:23-24; 42:17.

மோசேயின் மீதியான நாட்களில் மோசே எழுதியிருக்கலாம் என்பது தால்மட் எனும் யூதமத நூலின் கருத்து.

எலிகூ, சாலொமோன், எரேமியா பெயர்களும் ஆசிரியர்களாக அனுமானிக்கப்பட்டன.

குடும்பத்தலைவர் பலிசெலுத்தி வழிபாடு செய்தல், எகிப்தியரிடமிருந்து விடுதலை குறிக்கப்படாமை, நியாயப் பிரமாணத்தின் மறைவு, நீண்ட நாள் வாழ்ந்த யோபு... போன்ற உண்மைகள், யோபு முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு காலத்திய மனிதன் எனக்குறிப்புணர்த்துகின்றன.

அருட்செய்தி

சர்வவல்ல தேவனின் ஆளுகையும், அதிகாரமும், அதிவல்லமையுமே யோபு முழுவதிலும் வியாபித்திருக்கிறது. பாடுகளின் நோக்கங்களை விட பரமபிதாவின் ஆளுகையே பெரிதும் விளக்கப்படுகிறது.

அமைப்பு

யோபுவின் முன்னுரையும், முடிவுரையும் உரைநடையிலும் (1:1; 2:13; 42:7-17), முழுநூலும் கவிதை நடையிலும் எழுதப்பட்டிருக்கிறது.

யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு ஆகிய ஐந்து நூல்களும் செய்யுள்வடிவக் கவிதை நூல்களாகும்; இவை எபிரெயமொழியினின்று மொழிபெயர்க்கப்பெற்றவை.

பாதிப் பழைய ஏற்பாடு செய்யுள் வடிவம் எனலாம்; பழைய ஏற்பாட்டின் பல நூல்களில் கவிதைப்பகுதிகள் இடம் பெற்றிருக்கின்றன.

ஞான இலக்கியங்களுள் ஒன்று யோபுவின் சரித்திரம்.

வாழ்க்கையின் நோக்கம், விசுவாசம், வழிமுறைகள், கடவுளின் வல்லமை, வழிநடத்துதல், விதிமுறைகள் மண்ணுலக நாட்களில் அறம், பொருள், இன்பம், வீடு... ஆகியனவற்றை அலசிப்போதித்து ஞானம், அறிவு, நன்னெறி, விவேகம், நியாயம், புத்தி ஆகியனவற்றைப் புகட்டிப் போதிப்பவை ஞான இலக்கியங்கள்.

ஞான இலக்கியங்களில் ஒன்றாகிய யோபுவில் ஞானிகளையும், ஞானம் சார்ந்த வசனங்களையும், ஞானத்திற்காகவே ஒதுக்கப்பட்ட ஓரதிகாரத்தையும் காணலாம், 28.

யோபு ஒரு நாடகபாணி நூல்!

சர்வவல்லவருக்கும் சாத்தானுக்குமிடையே நடைபெற்ற உரையாடல்களையும், கணவனுக்கும் மனைவிக்குமிடையே விளங்கிய உரையாடலையும், நண்பர்களுக்கிடையே நிகழ்ந்த நீண்ட உரையாடல்களையும், தேவனுக்கும், அவரது தாசனுக்குமிடையே நிகழ்ந்த உரையாடல்களையும் காணலாம்.

அர்த்தம்

"அயோப்" என்ற எபிரெயச் சொல்லுக்குப் "பகையின் குறி"யென்றும், "அயோப்" என்ற அரேபிய வார்த்தைக்கு "மனந்திரும்பு" அல்லது "சீர்பொருந்து" என்றும் பொருள். கிரேக்க, இலத்தீன் மொழிகளிலும் "அயோப்" என்றே இச் சொல் இடம் பெறுகிறது. இப்பெயரே மருவி "யோபு" என்ற மாறியிருக்கலாம் அல்லது மொழிபெயர்க்கப் பெற்றிருக்கலாம். ©

2. விசுவாசம்

சாட்சி சொல்வது எளிது; சாட்சி எழுதுவதும் எளிது; சாட்சி பெறுவது கடினம்.

சாட்சிபெற்ற விசுவாசிகளின் பட்டியலை எபிரெயர் 11 ஆம் அதிகாரத்தில் காண்கிறோம்.

சத்தியத்தாலும், சர்வவல்லவராலும் சாட்சிபெற்றவன் யோபு. "ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர் கொண்ட ஒருமனுஷன் இருந்தான்; அந்தமனுஷன் உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாங்குக்கு விலகுகிறவனு மாயிருந்தான்". *1:1, 8; 2:3.*

யோபு முதலிரு அதிகாரங்களில் ஐவகைக்காட்சிகளைக் காணலாம். பூவுலகில் மூன்று : *1:1-5, 13-22; 2:8-13*; தேவ சந்நிதியில் இரண்டு : *1:6-12; 2:1-7*; ஐவகை முக்கியப் பாத்திரங்களையும் பார்கலாம் :

1. சன்மார்க்கன், 1:1-5.

யோபுவைக் குறிக்கும் அடைமொழிச் சிறப்புச் சொல் இது.

குணாளன், 1.

நான்குவித நனிசிறப்புக்கள் பொருந்திய நற்சாட்சியைப் பெற்றவன் அவன்.

உத்தமனாக வாழ்ந்தவன் யோபு.

பாவமில்லாப் பரிசுத்தனல்ல அவன்; பாவத்தன்மை எல்லோரையும் போன்று அவனுக்கும் உண்டு. ஆனால் பாவத்தை எதிர்த்துப் போராடி பரிசுத்தம் பேணி, உத்தமனாகத்தன்னைக் காத்துக் கொண்டவன் யோபு.

அவன் உத்தமத்திற்கு உற்ற மனைவியும் சாட்சி. 2:9; உற்ற நண்பர்களும் சாட்சி 4:6; "என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னைவிட்டு விலக்கேன்," என்பது யோபுவின் தனிப்பட்ட சாட்சி. 27:5.

உத்தமவாழ்க்கை சாத்தியமா? நோவாவும், காலேபும், நாத்தான்வேலும் உத்தம வாழ்வுக்கு உன்னத தேவனால் சாட்சி பெற்றார்களே. ஆதி. *6:9*; எபி. *11:7*; எண். *32:11*; யோவா. *1:47.*

உத்தமமும் உண்மையுமான ஊழியக்காரராக வாழவேண்டுவது ஒவ்வொருவர் கடமையாகும். மத். 25:21; 23.

சன்மார்க்கனாக ஜீவித்தவன் யோபு.

தேவ நீதி நெறிகளிலும், மனித உறவுகளிலும் நேர்மையாக வாழ்ந்தவன். உலகத்தால் மதிக்கப்பட்டவன்; ஒழுக்கமாக வாழ்ந்த வந்தவன்.

சன்மார்க்கன் என்று அழைக்கப்படுவதைவிட இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்ட நீதிமானாக எண்ணப்படுவதே சாலச்சிறந்த சாட்சியாகும்.

தேவனுக்குப் பயந்து வாழ்ந்தவன் யோபு.

ஆதாமைப்போலத் தண்டனைக்குப் பயந்து வாழாமல் (ஆதி. 3:10), ஆபிரகாமைப்போல அன்புக்குப் பயந்து ஆண்டவருக்குத் தன்னை முற்றிலும் அர்ப்பணித்து வாழ்ந்தவன் அவன். ஆதி. 22:12.

முதலிடமும், முழு இடமும், முக்கிய இடமும் தேவனுக்குச் கொடுத்து, தேவனுக்கேற்ற துக்கத்தோடு தினந்தோறும் ஜீவித்தான். 2 கொரி. 7:11.

தீமைக்கு விலகி வாழ்தவன் யோபு.

தேவனுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்வதெப்படியென்ற தூய சிந்தையோடு தன்னைக்காத்துக்கொண்டவன் அவன். யோபுவின் இலட்சியமும், யோசேப்பின் இருதயமும் இணையானவை. ஆதி. 39:9.

திருமறையில்லாத காலத்தில் வாழ்ந்த யோபுவே அருஞ் சாட்சியாயிருந்திருக்க, கிருபையின் காலத்தில் வாழும் விசுவாசிகள் எத்தனைச் சிறப்பாய்த் தங்கள் சாட்சியை மெத்தவும் காத்துக்கொள்ளவேண்டும்.

குபேரன், 3.

மற்ற முற்பிதாக்களைப்போல யோபுவும், கிழக்கத்திப் புத்திரர் எல்லாரிலும் பெரியவனாயிருந்தான்; எராளமான மிருக ஜீவன்களும், திரளான பணிவடைக்காரரும் அவனுக்கு இருந்தனர்.

இருப்பினும் -

செல்வத்தை அருளியவர் தெய்வமே என்று எண்ணி வாழ்ந்தவன் யோபு. 1:21; உபா. 8:17-18.

செல்வத்தைத் தவறான வழிகளில் சேர்க்கவில்லை. 31:5-8; செல்வம் சென்றுவிட்டபோது தேவனைத் துதித்து ஆராதித்தான்; :21; தெச. 5:18; 5:18; நீதி. 28:20.

செல்வத்தைத் தியாகமான சேவைகளிற் செலவழித்தான். 21:26; நீதி. 28:27.

செல்வத்தின் உரிமையாளர் தெய்வம்; தான் உக்கிரக்காரனே என்ற தத்துவத்தோடு வாழ்ந்தான். 31:16-22,32; 1 பே. 4:10.

வானத்தின் ஆசீர்வாதங்கள் வழிந்தோடும் வாய்க்கால்களாக வைக்கப்பட்டிருக்கிறோமேயொழிய, ஆண்டவருடைய ஆசீர்வாதங்களை அடக்கி ஆண்டு அனுபவித்து வாழும் அணைக்கட்டுகலல்லர் நாம்.

செல்வத்தின் மேல் அவன் இருதயமில்லை. எல்லாவற்றையும் இழந்தபின்னர், இழந்த செல்வத்தைக்குறித்து ஒருதடவை கூட அவன் அங்கலாய்க்கவில்லையே. *1:21; 31:24-28;* மத். *6:21.*

தாமரை இலைத்தண்ணீர்போல வாழ்ந்த யோபு, உலகத்தால் தன்னைக் கறைபடாமல் காத்துக்கொண்டான். செல்வம் என்றால் "செல்வோம்" என்பதுதானே பொருள். பணம் பாதாளம் வரைதானே பாயும்; பரலோகம் வரை பாயாதே.

பறந்து செல்லும் பொருள்மேல் கண்களைப் பறக்கவிடுவானேன்? நீதி. *23:4-5;* சங். *62:10.*

குடும்பஸ்தன், *2:4-5.*

யோபுவுக்குப் பக்தியிருந்தது *(1:1);* பணபலம் இருந்தது *(3);* புகழ் இருந்தது; பெருங்குடும்பம் இருந்தது. கணவண் - மனைவி - ஏழு குமாரர் - மூன்று குமாரத்திகளென இணைந்த பன்னிருவர் குடும்பம் அது!பத்துப்பிள்ளைகளோடு பூரணமாய்த் தன் அம்பாறாத் தூணியை நிரப்பிய பாக்கியவான் யோபு, சங். *127:4-7.*

பணக்காரக் குடும்பம் அது!

ஏழாயிரம் ஆடுகள், மூவாயிரம் ஒட்டகங்கள், ஐந்நூறு ஏர்மாடுகள், ஐந்நூறு கழுதைகள். பணம் பொருள் பெருகியதுமன்றி பணிவிடைக்காரர்களும் ஏராளம்.

பாசமுள்ள குடும்பம் அது!

சகோதரபாசம் யோபுவின் குடும்பத்தில் சிறந்து விளங்கியது. சகோதரர் சகோதரிகளை முறைப்படி விருந்துக்கழைத்து உறவுகொண்டாடியது, எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமாக இருந்திருக்கும். நிச்சயமாகவே கர்த்தர் அங்கே ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிட்டிருப்பாரே. சங். 133.

பரிசுத்தம் வாஞ்சிக்கும் குடும்பம் அது!

குடும்பத்தலைவனாகிய யோபு தன் குமாரர் ஒருவேளை பாவஞ்செய்திருக்கலாம்; தேவனைத்தங்கள் இருதயங்களில் தூஷித்திருக்கலாம் என்றெண்ணி, அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தம் பண்ணி, அதிகாலமே எழுந்து அவரவர் இயக்கத்தின்படி பலிசெலுத்தவான், 5.

பக்தியுள்ள குடும்பம் அது.!

வெறுமனே விருந்துக்கோ, விளையாட்டுக்கோ, வேடிக்கைக்கோ, வியாபாரத் திட்டங்களுக்கோ அவர்கள் அவ்வப்போது கூடவில்லை. வழிபாட்டுக்காகவும் பலிசெலுத்துதலுக்காகவும் கூடி, பக்தியை வெளிக்காட்டிய பண்பாடுள்ள குடும்பம் அது.

சர்வ வல்லவர், 1:6-12.

சர்வவல்லவருக்கும் சாத்தானுக்குமிடையே ஒரு சம்பாஷணை நடக்கவிருக்கிறது. அதை யோபுவோ, அவன் குடும்பமோ, அவனது நண்பர்களோ அறியார்கள்; நாமறிவோம். எனவே அவர்களுடைய இறையியலைவிட நமது இறையியல் சீராக இருக்க வேண்டும்.

சந்நிதி, 6:12-2:7.

ஒரு நாள் (எந்தநாள் என்பது சொல்லப்படவில்லை) கர்த்தருடைய சந்நிதியில் தேவபுத்திரரும், சாத்தானும் வந்து நின்றனர். அவர்கள் பரலோகத்தில் தேவ சந்நிதியில் நின்றார்கள், என்று சொல்லப்படவல்லை. எங்கோ ஓரிடத்தில் கர்த்தருடைய சந்நிதியில் நின்றனர்.

சர்வாதிகாரம், 6:7.

ஆண்டவர் அனைத்தையும், அனைவரையும், ஆவிகளை ஆளுகிறார். எல்லாரும் அவருக்குக் கணக்கொப்புவிக்கவேண்டும்; அலகையும், ஆவிகளும் அவருடைய அதிகாரத்திற்கு குட்பட்டவர்கள், அண்டவருடைய சித்தத்திற்கும், ஞானத்திற்கும் மிஞ்சி அவை செயல்படமுடியாது. அவைகளை ஆண்டவர் தம் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகிறார். 1 இரா. 22:1-22.

கர்த்தர் சாத்தானைப்பார்த்து; நீ எங்கேயிருந்து வருகிறாய் என்றார். சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக பூமியெங்கும் உலாவி, அதிலே சுற்றித்திரிந்து வருகிறேன் என்றான், 7.

மனித வாழ்வைக்கெடுக்க மனுஷனைத் தேவனுக்கு விரோதியாக்க, தேவனுக்கு முன் விசுவாசியைக் குற்றப் படுத்த, தனக்குக் கொஞ்சக்காலமே உண்டென்றிந்து முடிவில்லாக் குழப்பத்தோடு, கோபத்தோடு உலகெங்கும் சுற்றிவருகிறான். அந்தக்கலகக்காரன், 1 பே. 5:8.

சகாயம், 8.

"கர்த்தர் சாத்தனை நோக்கி: என்தாசனாகிய யோபின் மேல் கவனம் வைத்தாயோ?" என்றார்.

அவ்வாறாயின் தேவன் யோபின்மேல் கவனம் வைத்து கரிசனையோடு காப்பாற்றி வந்துகொண்டிருக்கிறார் என்பது பொருள். ஆண்டவருடைய கவனத்தில் சகாயமிருக்கும்; அலகையின் கவனத்தில் சச்சரவு பிறக்கும்.

சாட்சியம், 8:2-3.

யோபு தன்னுடைய தாசன் என்று நான்கு முறை சாட்சியமளிக்கிறார் நல்ல தேவன். 1:8; 2:3; 42:7,8.

ஆபிரகாமும், ஈசாக்கும், யாக்கோபும், மோசேயும், காலேபும், தாவீதும், இஸ்ரவேலும் தாசர்களாக அழைக்கப்பட்டனர். உபா. 9:28; எண். 12:7; 14:24; 2 சாமு. 3:18; சங். 136:22; தானியேலும், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவும் தேவதாசர்களாகக் கருதப்பட்டனர். தானி. 3:26; 6:20. இயேசுகிறிஸ்தும் தேவதாசராக அழைக்கப்பட்டார். சக. 3:8; மத். 12:18.

அது மட்டுமின்றி யோபு உத்தமன், சன்மார்கன், தேவனுக்குப் பயப்படுகிறவன், பொல்லாப்புக்கு விலகுகிறவன் என்று இருமுறை சாட்சிபகர்ந்தார் இறைவன், 1:8; 2:3.

சவால், 9-11.

தேவனுடைய வளமான வாழ்வும், வேலியடைப்புமே யோபுவின் தேவபயத்திற்குக் காரணம்; தேவன் தம் கையை நீட்டி யோபுவின் உடைமைகளைத் தொடுவாரெனில் அவன் அவரைத் தூஷிப்பது நிச்சயமென்று சவால் விட்டான் சாத்தான்; 9-10.

சவாலை ஏற்றுக்கொண்டார் சர்வவல்லவர். யோபுவின் வாழ்க்கை சர்வவல்லவருக்கும் சாத்தானுக்கும் ஒரு போர்க்களமாகிவிட்டது. யோபுவை உத்தமனென்று நிரூபிப்பது தேவனுடைய சவால்; அவன் தன் உத்தமத்தை உதறி, உன்னதரைத் தூஷிப்பான் என்பது சாத்தானின் சவால்.

சம்மதம், 12.

சவாலை ஏற்றுக்கொண்டு யோபுவைப்புடமிட யேகோவா அனுமதித்தார். ஆயினும் தம் கரத்தை நீட்டி அவனையோ, அவனுக்குண்டானவற்றையோ அவர் தொடாமல், அலகையின் கையிலே அவனுக்குண்டானவற்றைத்தொட அனுமதி வழங்கிவிட்டார்; 12. யோபுவின் விசுவாசத்தில் தேவனுக்கு நம்பிக்கையிருந்தது.

யோபுவுக்குண்டான சகலத்தையும் சாத்தான் கையில் கொடுத்து, அவனது சரீரத்தை மட்டும் தொடாதிருக்கப் பணித்தார். ஆண்டவருடைய அனுமதியின்றி, பிசாசோ, பகைஞரோ பிணியோ, பஞ்சமோ அவருடைய பிள்ளைகளை அணுகா. சாத்தானுக்கு எந்த அதிகாரமுமில்லை; சர்வாதிகாரமுள்ளவர் கர்த்தர்; அவருடைய பிள்ளைகள் அவருடைய அதிகாரத்தில் பங்குபெறுவர். லூா. 10:19.

யோபுவின் துன்பம் தேவனுடைய கரங்களிலிருந்து வராமல், அவர் அனுமதிக்க, பிசாசின் கையிலிருந்து வரவிருக்கிறது, 12.

"சோதிக்கப்படுகிற எவனும், தான் தேவனால் சோதிக்கப் படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல; ஒருவனையும் அவர் சோதிக்கிரவருமல்ல". யாக். 1:13.

கோதுமையைச் சுளகிலே போட்டுப் புடைப்பது போன்று யோபுவைப் புடைக்க, சத்துருவாகிய பிசாசு தேவனிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு புறப்பட்டுவிட்டான்.

சாத்தான், 1:6;1-12;2:1-8.

மில்டனின் பரிதாபத்திற்குரிய சாத்தானோ, டான்டியின் பயங்கரமான சாத்தானோ, மெபிஸ்டோபெலிஸிகாவின் பழி வாங்கும் சாத்தானோ, கோதியின் பரியாசஞ்செய்யும் சாத்தானோ பரிசுத்த வேதத்தில் சாத்தானைப்பற்றி விவரிக்கும் படங்களல்ல.

"பிசாசுகளைப்பற்றி எனக்கு நம்பிக்கை கிடையாது; சாத்தான் என்று ஒன்றும் கிடையாது" என்று சொல்வது திருமறைக்கு ஒவ்வாத தவறு.

எதற்கெடுத்தாலும் பிசாசின்மேற் பழிபோட்டு, அங்கே பிசாசு, இங்கே பிசாசு என்று சொல்லி, பிசாசின் போராட்டத்தை வலியுறுத்தி இயேசுவின் மேலுள்ள கவனத்தைத் திருப்பி, பிசாசின் மேல் கவனம் செலுத்தும், செலுத்த வைக்கும் போதனை இன்னொரு தவறு.

யார் இந்தச் சாத்தான்?

தத்துவரீதியாகப் பார்த்தால், இன்பமுண்டென்றென்றால் துன்பமுமிருக்கிறது; வெற்றியும் தோல்வியுமுண்டு; ஞானமும், அஞ்ஞானமுமுண்டு, இரக்கமும் கொடுமையும் உண்டு. இந்த இருவித நிலைமைகள் உலகிலிருக்க, இறைவன் உன்டென்றால் அதற்கு மாறான இடும்பனும் உண்டென அறிந்துகொள்ளலாம்.

திருமறையில் இயேசுவும் (மத். 4:1-4), யோவானும் (1 யோ. 3:8), பவுலும் (எபே. 2:2), பேதுருவும் (1 பே. 5:8), இன்னும் பலரும் சாத்தானின் ஆளுமை குறித்துத் தெரிவிக்கின்றனர்.

தனிப்பட்ட ஒவ்வொருவரின் வாழ்க்கையிலுள்ள பாவப்போராட்டம், பரிசுத்த மின்மை, தோல்வியின் ஜீவியம், தொற்றிக்கொள்ளும் தீயபழக்கங்கள் போன்றவை பிசாசின் கிரியைகளைப் புலப்படுத்துகின்றன.

தெளிவான விபரங்கள், பிசாசு துரத்துதலிலும், பிசாசு போராட்டங்களிலும், அலகை வழிபாடுகளிலும், ஆவிகளோடுள்ள போர்களிலும் விளங்குகின்றன.

யோபுவின் சரித்திரத்தில் படமெடுத்தாடும் இந்தப்பழைய பாம்பின் சில படங்களைப் பார்க்கலாம். வெளி. 12:9.

கர்வ மிக்கவன் 1:9-11;2:4-5.

அண்ட சராசங்களைப்படைத்த ஆண்டவரையே துணிகரத்தோடு கேள்விகேட்கிறான் சாத்தான். உள்ளத்தில் பெருமையும், உதடுகளில் திமிரும் உதிருகின்றன. பெருமையால் வீழ்ந்தவன் இந்த ஒளியின் தூதன். ஏசா. 14:12-17; ஏசே. 28:12-19; வெளி. 12:7-10. விசுவாசியின் வாழ்க்கையில் வஞ்சகத்தோடு விளையாடிவரும் இவன் விசுவாசியைப் பெருமைப்படுத்தியே விழவைப்பான்.

கட்டுப்பாட்டிலிருப்பவன், 1:6-7.

ஒரு காலத்தில் தேவனால் படைக்கப்பட்டவன், தேவக்கட்டுப் பாட்டிலேயே உலாவிவருபவன்; அவனுக்கு ஆண்டவர் அருளினாலொழிய அதிகாரமோ, அறிவோ இல்லை.

அவன் உலகெங்கும் விரைந்து செல்லலாமேயொழிய, உலகெங்கும் வியாபித்திருக்கமுடியாது. ஆண்டவர் ஆணையிடும் போதெல்லாம் அவையடக்கத்தோடு ஆண்டவர் சமுகத்தில் வந்து நிற்கவேண்டும்.

ஆண்டவருடைய அறிவையோ, திட்டத்தையோ, நோக்கத்தையோ வழிநடத்துதலையோ அவன் அறியான்; அவர் அனுமதியின்றி ஓர் அணுவையும் அவனால் அசைக்க முடியாது. லூ. 22:31.

வரம்புகளுக்குட்பட்ட சாத்தான், வேலையில் கெர்ச்சிக்கிற சிங்கமாக இருந்தாலும், வல்லமையில் கூண்டுப்புலிதான் 1 பே. 5:8. உலகத்தில் இருக்கிறவனைப் பார்க்கிலும் உங்களில் இருக்கிறவர் பெரியவர். 1 யோ. 4:4.

குற்றஞ் சாட்டுகிறவன், 9-11.

"எதிராளி"யாகிய சாத்தான் என்றும் விசுவாசியைக் "குற்றஞ் சாட்டுகிறவன்" 1 பே. 5:8-9; வெளி. 12:10. "தேவனை யோபு சேவிப்பதற்கு காரணம் ஆண்டவர் அவனுக்கு அருளிய வருமானமும், வேலியடைப்பும்," என்று கர்த்தரை மறைமுகமாகக் குற்றஞ்சாட்டிய சாத்தான் ஆண்டவர் அவனுக்குண்டானவற்றை அழித்துவிட்டால் அவரை முகத்துக்கு நேரே அவன் தூஷிப்பது நிச்சயம் என்று யோபுவையும் குற்றஞ்சாட்டுகிறான்.

அதாவது, தேவன் லஞ்சம் கொடுத்து யோபுவைப் பஞ்சம் பிழைக்க வைக்கிறார்; எனவேதான் அவரே தஞ்சமெனக்கிடக்கறான் அந்த அடிமை! என்று வஞ்சகமாகப் பரிகசிக்கிறான் பிசாசு.

"மெய்யான மனமாற்றமின்றி, அரிசியும், பருப்பும், ஆடையும், எண்ணையும் கொடுத்து ஆட்களைக் கிறிஸ்தவத்திற்குள் இழுக்கும் அநாகரிகம்"! என்ற குற்றஞ்சாட்டுப்போலிருக்கிறதல்லவா?

கொலைபாதகன், 13-19.

வேலைக்காரர்களை வெட்டி, விலங்குகளை ஓட்டிச்செல்லவும். வீட்டிலுள்ள பிள்ளைகளைக் கொல்லவும் வன்முறை எதிரிகளையும், வனாந்தரத்தின் பெருங்காற்றையும் வரவழைத்து, வேலியைப் பிடுங்கி வெறுமையாக்கினான் சாத்தான்.

கொள்ளைக்காரன், 14-17.

"திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்," என்ற வசனத்திற்கு வடிவம் வஞ்சகப் பிசாசு. யோவா. 10:10. ஆண்டவரைத் "தூண்டி" விட்டவன், அவிசுவாசிகளையும், ஆகாயத்து வல்லமைகளையும், ஏவிவிட்டு அனைத்தையும் அழித்துப்போட்டான்.

சபேயர் சேபாவிடமாகிய தெற்கிலிருந்து வந்தவர்கள், கல்தேயர் வடக்கிலிருந்து வந்தவர்கள்; அக்கினிச்சூறாவளி மேற்கு மத்திய தரைப் பகுதியிலிருந்து வந்தது. வனாந்தரத்தின் பெருங்காற்று கிழக்கிலிருந்து வீசியது. ஆக, நான்கு திசைகளிலுமிருந்து கோதுமையைப்போல் புடைக்கப்பட்டான் யோபு.

"இவன் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் ..." என்ற சொற்றொடர் மும்முறை இந்தக் கொடுமைக் காட்சிகளில் அடுத்தடுத்து இடம்பெறுகிறது. 16, 17, 18.

இடைவிடாமல் அடத்தடுத்து, எதையும் தடுத்து நிறுத்த இடைவெளியில்லாமல் தொடர்ந்து இடர்கள் இடைமறித்துச் சூழ்ந்தன.

இப்பிரபஞ்சத்து அதிபதியும், ஆகாயத்து அதிகாரப்பிரபுவுமாகிய பிசாசு, யோபுவின் சொத்தையும் சொந்தத்தையும் சின்னா பின்னமாக்குகிறான். யோவா. 12:30; எபே. 2:2. ஆனால் அதற்கு மேல் ஒன்றும் செய்யமுடியவில்லை. வரம்புகளுக்குட்பட்டவன் அவன். 1:12. ஆண்டவர் வகுத்த எல்லை மீறி அவனால் தொல்லை கொடுக்க முடியாது. 38:8,11. திராணிக்கு மிஞ்சிய சோதனையைத் தேவன் அனுமதிப்பதில்லை. 1 கொரி. 10:13.

சன்மார்க்கன், 20-22.

சொத்துக்களையும், சொந்தப் பிள்ளைகளையும் ஒரே நாளில் இழந்தவன் யோபு, *13-19.* அடுத்தடுத்தான அதிர்ச்சியான செய்திகளைக் கேட்ட அவனது பிரதியுத்தரம் என்ன?

துயரங்கொண்டான் யோபு!

தாங்கொணாத் துயரத்தால் தன் சால்வையைக் கிழித்து, தன் தலையைச் சிரைத்து தரையிலே விழுந்து பணிந்துகொண்டான், 20. இயற்கையின் சீற்றங்களில் அதிர்ச்சியடைந்து இறைவனை நிந்திக்கவில்லை; எதிரிகளின் சூறையாட்டங்களை அறிந்து, எதிர்த்துப் பின்தொடரவில்லை; "ஏன் இப்படி நேரிட்டது?" என்று எதுவுங் கேட்கவில்லை; இருப்பதும், இழப்பதும் இறைவன் வகுத்த விதியென்றே ஏற்றுக்கொண்டான்.

தொழுகை செய்தான் யோபு

"தரையிலே விழுந்து பணிந்து கொண்டான்", 20. ஆண்டவருடைய அளுகைக்குள் இவையெல்லாம் சம்பவித்தன; அவருக்குமிஞ்சி எதுவும் நடக்காது; அவருக்குள்ளேயே அசைந்து பிழைப்பதால், "என்ன பிரிந்தாலும் இறைவன் பிரியார்", என்று கருதி வாழ்விலும் தாழ்விலும் வானவருக்குத் தானடிமையென்றுணர்ந்து வணங்குகிறான்.

துதி செலுத்தினான் யோபு

சீற்றமோ, சயபரிதாபமோ, சாபமோ சற்றேனும் அவன் வாயினின்று வெளிவரவில்லை; மாறாக, துன்பத்தில் துதிசெலுத்தினான்.

"நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன். கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்", 21. இழப்பையும், இறப்பையும் முழுமனதோடு ஏற்றுக்கொண்டான் யோபு.

"உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம்," என்ற பவுலின் போதனை யோபுவின் எதிரொலியோ? 1 தீ. 6:7.

தாயின் கர்ப்பத்திலிருந்து வந்த யோபு "அவ்விடத்துக்குத் திரும்புவேன்" என்று சொல்வதின் அர்த்தமென்ன?

"அவ்விடம்" என்பது நிச்சயமாகத் தாயின் கர்ப்பமல்ல; அவ்விடத்திற்குத்திரும்பிச் செல்ல முடியாது. தாய்போன இடத்திற்குத் தானும் போவதாகக் குறிப்பிட்டிருக்கலாம்; மண்ணிலிருந்து உண்டான மனிதன் மண்ணுக்கே திரும்பவேண்டும் என்பதை உணர்த்தியிருக்கலாம்; பெற்று பராமரித்து பின்னொருநாள் ஏற்றுக் கொள்ளும் மண்ணும் தாய் பூமிதானே; "அவ்விடம்" என்பது மறுமையைக் குறித்து யோபுவுக்குக் கொடுக்கப்பட்ட சிறப்பு வெளிப்பாடாகவுமிருக்கலாம். மீட்பரையும், மறுவாழ்வையும் பற்றிய வெளிப்பாடுகளை பெற்றவனாயிற்றே அவன்? 19:25-27.

"யோபுவின் சொத்துக்களையும், சொந்தத்தையும் கர்த்தர் கொடுத்தது உண்மை. "ஆனால் கர்த்தர் எடுக்கவில்லை; பிசாசே எடுத்துக்கொண்டான்!" என்று போதிப்பது தவறு. ஆண்டவரிடமிருந்து அபகரிக்க அனுமதிபெற்றவன் அலகை; அவ்வளவுதான்!

தன் தோட்டத்திலிருந்த மாமரத்தில் சில பழங்களைப் பறிக்கச் சொல்லி, வேலைக்காரனைப் பணித்தார் எஜமான். பழங்களைப் பறித்த வேலையாள் எஜமானிடம் அவற்றைக் கொடுத்தான். அவை அவனுக்குச் சொந்தமானவையல்ல; அவருக்குச் சொந்தமானவை. அதுபோல, சாத்தான் சர்வவல்லவரின் வேலைக்காரர்களில் ஒருவன். ஆண்டவருடைய அனுமதியின் பேரில் பறிக்கும் அவன் ஆண்டவரிடத்திலே அவற்றைக் கொடுத்துவிட வேண்டும். அவன் தனக்கென்று அவற்றை எடுத்துக்கொள்ள முடியாது. கர்த்தர் கொடுத்தார்; கர்த்தர் சாத்தானை அனுமதித்து எடுத்துக் கொண்டார். பறிக்கப்பட்டவையெல்லாம் பரமபிதாவுக்கே சொந்தம். சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. கொலொ. 1:6.

ஆத்துமாக்களை அவன் எடுத்துக்கொள்ள முடியாதே. ஆவி தன்னைத் தந்த தேவனிடம் திரும்பிச் செல்ல வேண்டுமே. மரித்த பத்துப்பிள்ளைகளும் தேவனுடைய மடியில்; அவ்வப்போது பலி செலுத்திப் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் அவர்கள். அதனால்தான் இறுதியில் எல்லாவற்றிலும் இரட்டிப்பான ஆசீர்வாதம் பெற்ற யோபு. இருபது பிள்ளைகளைப் பெறாமல் மீண்டும் பத்துப்பிள்ளைகளை மட்டும் பெற்றான்; உலகத்தில் பத்துப்பிள்ளைகள்; உன்னதத்தில் பத்துப்பிள்ளைகள்; இரட்டிப்பான ஆசீர்வாதந்தானே. 4-5;42:10.

தூய்மையைக் காத்துக்கொண்டான் யோபு

"இவையெல்லாவற்றிலும் யோபு பாவஞ் செய்யவுமில்லை, தேவனைப்பற்றிக் குறை சொல்லவுமில்லை, 22.

துதி நிறைந்த வாழ்வு தூய்மை நிறைந்த வாழ்வு. மனுஷனுடைய மதியீனமே மகிபன்மேல் மனத்தாங்கல் கொள்ளும் நீதி. 19:3.

மனுஷனுடைய ஞானமோ நன்மையில் நன்றி செலுத்தும்; துன்பத்தில் துதி செலுத்தும்.

எக்காலத்திலும் ஸ்தோத்தரித்தவன் தாவீது. சங். 34:1.
எல்லாவற்றிலும் துதிப்பது தேவசித்தம். 1 தெச. 5:18.

சர்வ வல்லவர், 2:1-7.

மீண்டுமொருநாள் தேவசந்நிதியில் தேவப்புத்திரரும் சாத்தானும் வந்து நின்றனர். முந்தியநாளுக்கும் (1:6) இன்றை நாளுக்குமிடையே (2:1) இடைவெளி நாட்கள் எத்தனையென்று திருமறை குறிப்பிடவில்லை. அடுத்தடுத்த நாட்களாக இருக்கலாம்; அல்லது இறந்த பிள்ளைகள் அடக்கம்பண்ணப்பட்டபின் மற்றொரு நாளாக இருக்கலாம்.

மீண்டும் கேள்வி, 2-3.

பக்தன் யோபுவின் உத்தமம் வென்றதால் மீண்டும் பழைய கேள்விகளையே சாத்தானிடம் கேட்டார் கர்த்தர். 1:6-8. சவாலில் தான் வென்ற சந்தோஷமும் சர்வவல்லவரின் தொனியிலிருந்தது.

முகாந்தரமின்மை, 3.

முகாந்தரமின்றி நிர்மூலமாக்கப்பட்டவன் யோபு என்று முன்னவரே சாட்சி சொல்லிவிட்டார். எனவே யோபுவின் பாடுகளுக்கக் காரணம் அவன் செய்த பாவங்களே; அவனது சுய நீதியே! எவரும் சொல்ல முடியாது.

விசுவாசி சந்தோஷத்தோடும், சமாதானத்தோடும், சவுக்கியத்தோடும் வாழ்வதைவிட, தேவசாயலில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து பெருகுவதே தேவசித்தம். அவருடைய சாயலில் நாம் வளர அவர் எதைவேண்டுமானாலும் செய்வார்; அனுமதிப்பார். விசுவாசியின் வாழ்க்கையின் நோக்கம் சுய மகிழ்ச்சியல்ல; தேவ மகிமை!

மறுபடியும் சவால், 4-6.

சொத்தையும், சொந்தத்தையும் இழந்த யோபு, சுகத்தையும், சுதந்திரத்தையும் இழக்க மறுபடியும் சவாலிடுகிறான் பிசாசு; ஜீவனை மட்டும் தப்பவிடச்சொல்லிச் சம்மதிக்கிறார் தேவன்.

ஒருமறை சோதித்துத் தோற்றுப் போன சாத்தான் மறுபடியும் மட்டுமல்ல, திரும்பத் திரும்பச் சோதிக்க வருவான். ஆண்டவரை அவன் சோதித்த நிகழ்ச்சிகளில் அப்படிப் பார்க்கிறோம். மத். 4:1-11; லூா. 4:1-11.

சாத்தான், 2:1-7.

ஆண்டவருடைய ஆணைக்குக்கட்டுப்பட்டு அவருடைய சந்நிதியில் அவைக்கு முன்பாக வந்து நிற்கிறான் அலகை, 1.

இறுமாப்புள்ளவன், 1.

முதற் சவாலில் அடிபட்ட பாம்பாகிய சாத்தான் அவையடக்கத்தோடு ஒங்கி நிற்பதற்குப் பதிலாக, எப்படி எங்கே நிற்கிறான் என்று பாருங்கள். "நடுவிலே!" 2:1. எல்லோரும் தன்னைப்பார்க்க வேண்டும் என்ற நடு நாயகக் கவர்ச்சிவேண்டி, பெருமையோடு நிற்கிறான் பிசாசு. பெருமையே அவன் வீழ்ச்சிக்குப் பெருங்காரணம்.

விசுவாசியையும் அவன் பெருமைப்படவைத்தே விழவைப்பான். பொது இடங்களில் உன்னத இடத்தை நாடுகிறோமா? ஒதுங்கி அடக்கத்தோடு நிற்கிறோமா? நீதி. 25:6, 7

எதிர்த்து நின்றவன், 3.

எதிராளியாகிய சாத்தான் தேவனையும், அவரது திட்டங்களையும், தேவதூதர்களையும், தேவ தாசர்களையும் எதிர்ப்பவன். 1 பே. 5:8-9.

யோபுவின் உத்தமத்தை ஏளனஞ் செய்து, எந்த அநியாயமுஞ் செய்ய எதற்கும் துணிந்து நின்றான் பிசாசு. அப்படிப்பட்ட அசுத்த ஆவியைத் தேவன் எதற்காக அனுமதிக்கிறார்?

- தம்முடைய வல்லமையைக்காட்ட, அதி. 38-41.
- சாத்தானுடைய வல்லமையின்மையைக் காட்ட, யாக். 4:7.
- விசுவாசியைத் தாழ்மையில் காத்துக்கொள்ள, 2கொரி. 12:7.
- விசுவாசத்திலும் அர்ப்பணத்திலும் வளர்க்க, யோபு. 33:17-30.

• மேலாக, ஆவிக்குரிய போராட்டங்களிற் பயிற்சிபெற்றுத் தேறியவர்கள், அடுத்த பெலவீன விசுவாசிகளுக்குத் தங்கள் அனுபவத்தின் வாயிலாகப் பயற்றுவிக்க, பக்குவப்படுத்த, பயன்பட, தேவன் அவர்களைப் பாவிக்கிறார். 1 கொரி. 1:4-7.

ஏவி விட்டவன், 3.

ஆண்டவரையும் (2:3), ஆகாயத்து வல்லமைகளையும் (1:16, 19), அவிசுவாசிகளையும் (1:15, 17), அன்புமனைவியையும் (2:9), அருமை நண்பர்களையும் (அதி. 4-25) ஏவிவிட்டு ஏளனம் செய்தவன் அந்த இடும்பன். ஆவிக்குரிய தலைவர்களையும் ஏவிவிடுபவன் சாத்தான். இலக்கம் பார்க்க தாவீதை ஏவிவிட்டான் (1 நாளா. 21:1); சிலுவைக்கெதிராகச் சீமோன் பேதுருவை ஏவிவிட்டான் (மத். 16:21-23).

எவ்விடும் சாத்தானிடம் எச்சரிக்கைதேவை; ஆவியின் பட்டயமே அவனைத் தடுத்து நிறுத்தும் (எபே. 6:17); ஆண்டவரைப்பற்றும் விசுவாசமே அவனை ஜெயிக்கும் (1 யோ. 5:4).

மீண்டும் கர்த்தரையே கைநீட்டி யோபுவின் எலும்பையும் மாம்சத்தையுந் தொடச்சொன்னான் சாத்தான். (1:11;2:5). பாடுகளுக்குரிய பழியைத் தேவன் மேல் போடுவதே அவனது தந்திரம். கர்த்தரோ யோபுவை இமைப்பொழுது சாத்தான் கையில் விட்டார்.

எதற்குந்துணிந்தவன், 4-7.

படைப்பவர் தெய்வம்; உடைப்பவன் பிசாசு. கோதுமையைச் சுளகிலே போட்டுப்புடைத்த சாத்தான், கோதுமையை நொறுக்கவே திட்டமிட்டுவிட்டான்.

கெர்ச்சிக்கிற சிங்கம் (1 பே. 5:8); கள்ளன் (யோவா. 10:10); வலுசர்ப்பம் (வெளி. 12:9); வேடன் (சங். 91:3); பொல்லாங்கன் (மத். 13:19); கொல்லுகிற ஓநாய் (யோவா. 10:12); மரணத்தின் அதிகாரி (எபி. 2:14) ... என்றெல்லாம், இழிவாக அழைக்கப்படும் அவன் எரிநரகத்திருப் பாத்திரன்.

உச்சி முதல் உள்ளங்கால்வரை யோபுவைச் சோதித்தான், பாதித்தான், வாதித்தான் சாத்தான்.

மாம்சத்திலே சோதனை!

கொடிய பருக்கள் (2:7); பூச்சி அரிப்பு (7:5); தோல் வெடிப்பு (7:5); படுக்கையில் தவிப்பு (7:13); பயங்கரச் சொப்பனங்கள் (7:14); காயங்கள் (9:17); இளைப்பு (16:7); இருளடைந்த கண்கள் (17:7); சகிக்கமுடியாத சுவாசம் (19:17); எலும்பு, மாம்சம், தோலில்குறைபாடு (17:20); மாம்சப்பட்சிப்பு (19:23); நடுக்கம் (21:6); நோயின் உக்கிரம் (30:18); கறுத்துப்போன சரீரம் (30:28, 30); எழும்புகளின் வறட்சி (30:30) ... ஆக யோபுவை உருத்தெரியாமல் உருக்கிவிட்டான் பிசாசு 2:12.

மனதிலே வேதனை!

மனச்சஞ்சலமும் (10:1), மரண இருளும் (16:16), மனபயமும் (30:23) யோபுவைச் சூழ, மறைந்து கொள்ளும் தேவனுடைய (23:6-9) மறைவான நோக்கங்களறியாமல், மரணத்தை விரும்புகிறான் (7:15), யோபு! ஆவியின் வேதனையும், ஆத்துமக் கசப்பும் அவனது மனதை அங்கலாய்க்க வைக்கிறது. 7:11,15.

மனித உறவுகளிலே ரோதனை!

பகைவருடைய எரிச்சல், பந்து ஜனங்களின் மறைவு, பிராண சிநேகிதரின் பரியாசம், பிரிய மனைவியின் புத்தியீனம், பணிவிடைக்காரர்களின் அசட்டை, பிள்ளைகளின் கேலி, பரமதேவனின் பாராமுகம் ... எல்லாம் யோபுவைப் பாட்டும்,படி மொழியுமாக்கிற்று. 9:17; 16:20; 19:12-19; 30:9.

னருக்கு வெளியே ஒதுங்கி ஓட்டை எடுத்துச் சுரண்டிக்கொண்டு சாம்பலில் உட்கார்ந்தான் சன் மார்க்கன் 2:7-8.

ஆக யோபுவின் சொத்து, சொந்தம், சுகம், சுதந்திரம் எல்லாவற்றையும் இழக்கக் காரணமானான் பிசாசு.

மாண்புமிகு சாதனை!

பலவற்றை யோபு பறிகொடுத்தாலும், சிலவற்றைக் கர்த்தர் பாதுகாத்து வைத்திருந்தார்.

பிராணன் இருந்தது; பிரிய மனைவியிருந்தாள்; பிராண நண்பர்கள் வந்தனர்; பாடுகளின் மத்தியிலும் பழுத்த விசுவாசம் இருந்தது; "பொன்னாக விளங்குவேன்; பொற்காலம் வரும்; அந்நாளில் அவரைத் தரிசிப்பேன்; அவர் என்னைக் கொன்றாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்," என்ற ஆணித்தரமான அசைக்க முடியாத ஆழமான நம்பிக்கை அவனுக்குள் இருந்தது.

சுளாகிலே புடைக்கப்பட்டான் யோபு !

சாவிகள் பறந்தன; சரமணிகள் தங்கின!!!

விசுவாசியின் வாழ்விலும், எதைப்பற்றிகொடுத்தாலும் இயேசுகூட இருப்பார்; கிறிஸ்துவுக்குள்ளே சகலவற்றிலும் சம்பூரணமாயிருப்போம். கொலோ. 2:10.

திராணிக்கு மிஞ்சிய சோதனையில்லை; தாங்கத்தக்கதான பெலன் தருவார்; தப்பித்துக்கொள்ளும்படியான போக்கையும் தேவன் கட்டளையிடுவார். 1 கொரி. 10:13.

மாந்தருக்குப் போதனை!

ஆண்டவருக்கும் அலகைக்கும் நடைபெற்ற ஆவிக்குரிய போராட்டம் யோபுவுக்குத் தெரியாது; அந்தப்போராட்டத்தின் பகடைக்காயே தான்தான் என்று அவன் அறிந்திருக்கவில்லை. பாடுகளின் முகாந்திரம் அவனுக்குத் தெரியாது; முகாந்திரமின்றித் தான் பாடுபடுவதாகவே அவன் முறையிட்டான்; அதை ஆண்டவரே ஆமோதித்திருக்கிறார். 7:17; 10:7; 2:3.

முகாந்திரம் நமக்குத் தெரியும்; பவுல் அதனை விளக்குகிறான்; பரிகாரத்தையுங்குறிப்பிடுகிறான். "எனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு. ஆகையால் தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள் எபே. 6:12-13 .

எப்படிப் போர்புரிவது?

"நாங்கள்...மாம்சத்தின்படிப் போர்செய்கிறவர்களல்ல. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது.

அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்கலாயிருக்கிறோம். 2 கொரி. 10:3-5.

ஆவிக்குரிய அப்போராயுதங்கள் யாவை?

"சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்; சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும், பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாகயும் நில்லுங்கள்.

இரட்சனியமென்னும் தலைச் சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும். விண்ணப்பத்தோடும், ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு. மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்" எபே. 6:14-18.

சகி, 2:9-10.

"புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு." நீதி. 19:14; புத்தியில்லா மனைவியோ கத்தியுண்டாக்கும் நோவு.

அவள் ஏற்றதுணையாகப் படைக்கப்பட்டவள்; எலும்புருக்கியாக இருத்தலாகாது. ஆதி. 2:18; நீதி. 12:4;

"குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்; இலச்சை உண்டு பண்ணுகிறவளோடு அவனுக்கு எலும்புருக்கியாயிருக்கிறாள்.

"அவள் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அவனுக்குத் தீமையையல்ல, நன்மையையே செய்கிறாள்." நீதி. 31:12.

சொந்தத்தையும், சொத்தையும், சுகத்தையும், சுதந்திரத்தையும் இழந்துவிட்டு, ஜீவனை மட்டும் கையில் பிடித்துக் கொண்டிருந்தான் யோபு. சாத்தான் ஒதுங்கிவிடவில்லை; சதிநாடகத்தின் திரைமறைவில் நின்று யோபுவின் சகியையும் சகநண்பர்களையும் ஏவிவிடலானான்.

இன்னல்

யோபுவின் மனைவி அவனைப்போலவே, சொத்தையும். சொந்தத்தையும், இழந்தவள்; அவனுடைய சுவாசத்தை அவளால் சகிக்கமுடியவில்லை. சகலத்தையும் சகிக்க வேண்டிய இந்தச் சகியால் சங்கடங்களைச் சகிக்க முடியவில்லை. 1 கொரி. 13:7.

இன்னலால் என்னபயன் என்பது அவளது கேள்வி; இன்னலுக்குப் பின்னர் பொன்னாக விளங்குவேன் என்பது யோபுவின் பதில். 23:10. சஞ்சலத்தைவிட சாவதுமேல்; உபத்திரவத்தைவிட உயிர்விடுவது மேல் என்பது அவளது ஆதங்கம்.

இடறல்

உத்தமத்தைவிட உடல் நலம் முக்கியம்; ஜீவனைவிட சுக ஜீவியம் முக்கியம் என்று எண்ணி, "நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் துஷித்து ஜீவனை விடும்" என்றாள், 9.

ஆனால். இவையெல்லாம் நடந்தபின்னும், எதற்காக இப்படியெல்லாம் நடந்ததென்று அறியாத போதும் இறைவன்மேல் மிகக் கோபங்கொண்டும், அவள் தேவனைத் தூஷிக்கவில்லை; தாங்கொணாத் துயரால் தற்கொலைபண்ணிக் கொள்ளவுமில்லை.

கண்கண்டதைக் கைபெறவேண்டுமெனக் கருதி ஆதாமுக்கு இடறலாயிருந்தவள் ஏவாள்; காத்திருந்து கர்த்தருடைய ஆசிபெறப்பொறாமல் கணவனைத் தூண்டிவிட்டு இடறலாயிருந்தவள் சாராள்; கணவனை அலட்சியம் பண்ணிக் கர்ப்பம் அடைபட்டவள் மீகாள்; கண்ணீரால் காரியம் சாதித்துக் கடைசியில் மடிந்து போனவள் சிம்சோனின் மனைவி. கணவனை ஏவிவிட்டு கொலை செய்து கொள்ளையடித்தவள் யேசபேல்.

கணவன் பெலவீனத்தைப் பயன்படுத்தி, கர்த்தருடைய ஊழியக் காரனைக் கொன்றவள் ஏரோதுவின் மனைவி; கணவன் தீர்ப்பைத் தடுத்து நிறுத்தி, கர்த்தராகிய இயேசுவைக் காப்பாற்ற கடிதில் பிரயாசப்பட்டவள் பிலாத்துவின் மனைவி.

இடறலாக இருக்கிறோமா?
ஏணிப்படியாக இருக்கிறோமா?

இறைவனுடைய காரியங்களில் இடறலாக இருக்காதீர்கள்; இன்னல்கள் வரும்போது இறைவனிடம் மன்றாடுங்கள். சங். 46:10.

இடறல் ஏந்திரக்கல்லால் இணைக்கப்படும்; மத். 12:6. இடறலா யிருப்போர் பின்வாங்கிப் போவர்; முன்னேற மாட்டார். மத். 16:23.

பத்துப்பிள்ளைகளைப்பறிகொடுத்த அவளது பெற்ற வயிறு துடித்தது; புழுத்து நாறிக்கொண்டிருக்கும் புருஷனைப் பார்க்க சகிக்கவில்லை. எதனால் இப்படியெல்லாம் நேரிட்டது?

இன்னலுக்குக் காரணம் இறைவனே என்பது அவளது எரிச்சல். சாத்தானுக்கும் சர்வ வல்லவருக்குமிடையே நடந்த சம்பாஷனையை அவள் அறியாளே!

"இறைவனிடமிருந்து பதிலில்லை; இன்னலால் பயனில்லை; இருப்பதால் பிரயோஜனமில்லை; இம்மைக்குப்பிறகு மறுமையில்லை ..." என்றெல்லாம் எண்ணிய யோபுவின் மனைவி, "தேவனைத் தூஷியும்; ஜீவனை விடும்!" என்றாள்.

ஏன் அப்படிச் சொன்னாள்? அவள் தூஷிக்கவில்லையே! அவள் அப்படிச் சொன்னதற்காக ஆண்டவர் அவளைத் தண்டிக்கவில்லையே; சபிக்கவில்லையே; அவனோடு சேர்ந்து அவளையும் இரட்டிப்பாகவன்றோ ஆசீர்வதித்தார்? *42:10-17*. இறைவன் மிதுள்ள எரிச்சலைவிட, புருஷன் மேலுள்ள இரக்கமே அவளிடம் மிருந்திருந்தது.

காயப்பட்டுக் குற்றுயிராய்க்கிடந்து சாக முடியாமல் தவிக்கும் குதிரையைச் சுட்டுக் கொல்வார்களாமே; அதன்பெயர் இரக்கக் கொலையாமே (Mercy Killing).

அதுபோல, அணுவணுவாய்ச் செத்துக் கொண்டிருக்கும் கணவன், அன்றாடம் அழுகியழுகிச் சாவதைவிட, ஆண்டவரைச் சபித்தால்; அவரே கொன்றுவிட்டு, அவனது அரும்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பார் என்பதே அவளது குறுக்குவழி ஆலோசனை. தானும் அவனைக் கொல்ல வேண்டாம்; தற்கொலை பண்ணவும் தூண்டவேண்டாம்; கர்த்தரைச்சபித்தால் அவர் கதையை முடித்துவிடுவார் என்பதே அவளது குதர்க்கமான அறிவுரை.

தேவனைச் சபிப்போருக்குச் சாவு நிச்சயம் என்பது அக்கால மக்களின் நம்பிக்கை; ஆண்டவருடைய வேதத்தின் தீர்ப்பு *1:5*; லேவி. *24:10-16*; *1* இரா. *21:10*; தேவதூஷணம் பிசாசின் குணம் வெளி. *13:1,5,6*; *13:9,11,21*; *19:11*.

நாபோத்தைக் கொல்லவும், ஸ்தேவானைக் கல்லெறியவும் தேவ தூஷணஞ் சொன்னதாகப் பொய்ச்சாட்சிகளை நிறுத்தின சம்பவங்களை அறிவோம். *1*இரா. *21:10*; அப். *6:11-15*; *7:58*.

வாயால் தேவனைத் தூஷிக்காமலிருக்கலாம்; வாழ்க்கையில் தூஷிப்பவர்களும், தங்கள் வாழ்க்கையினால் பிறர் தேவனைத் தூஷிக்கக் காணமாயிருக்கிறவர்களுமுண்டு. ஏசா. *8:21*; *52:5*; ரோ. *2:24*; தீத். *2:4*; *1* பே. *4:14*. "சகலவித... தூஷணமும் ... உங்களை விட்டு நீங்கக் கடவது." எபே. *4:31*.

நித்தம் நித்தம் யோபு செத்துச் செத்துப்பிழைப்பதைவிட நிம்மதியாகப் போய்ச்சேருவதே உத்தமம் என்று நிவாரணம் வழங்குகிறாள் அந்த நிர்ப்பாக்கியவதி. கடவுளைவிட கணவன் முக்கியம் என்பது அவளது களங்கமான கருத்து.

துதிக்கும் கணவன்!
தூஷிக்கச் சொல்லும் மனைவி!!

தன் நலன் முக்கியமல்ல! தேவநாமமே முக்கியமென வாழ்ந்த மனிதருள் மாணிக்கம் யோபு "நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ," என்று சொல்லி அவளது அறியாமையை அதட்டி அவளால் வந்த சோதனையையும், துதியாலும், தூய விசுவாசத்தாலும் முறியடிக்கிறான்.

"மனிதர் என்னைக் கைவிட்டாலும், மாமிசம் அழுகி நாற்றிட்டாலும், ஐசுவரியம் யாவும் அழிந்திட்டாலும், ஆகாதவன் என்று தள்ளிவிட்டாலும் இயேசு போதுமே!" என்று பாடுவது எளிது; பாடுபடுவது கடினம்.

சக நண்பர், 2:11-13.

நடந்ததெல்லாவற்றையும் கேள்விப்பட்டனர் யோபுவின் நண்பர்கள் மூவர்; தேமானியனான எலிப்பாஸ், சூகியனான பில்தாத், நாகமாத்தியனான சோப்பார். எலிப்பாஸ் என்ற பெயருக்குத் "தேவன் பசும் பொன்" என்றும், பில்தாத் என்ற பெயருக்குக் "குழப்புகின்ற அன்பு என்றும்" சோப்பார் என்ற பெயருக்கு "விரைவில் வெளியேறுபவன்" என்பதும் பொருள்.

மனக்கலக்கம்

மூவரும் கலந்துரையாடி மனவேதனைக் கலக்கத்தோடு மிக விரைவில் புறப்பட்டு வந்தனர். உடுக்கையிழந்தவன் கைபோல இடுக்கண் களையும் துடிப்பு அவர்களில் காணப்பட்டது. தூர தேசங்களிலிருந்து காசையும், நேரத்தையும் செலவழித்து, சொந்தக் குடும்ப, தொழில் காரியங்களைச் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு, துன்புற்ற நண்பனின் துயர் துடைக்க துக்கத்தோடு துரிதமாய்ப் புறப்பட்டு வந்தனர்.

ஏனிப்படி யோபுவுக்கு நேரிட்டது என்று ஒருவருக்கொருவர் கற்பனை பண்ணிக் கதையளக்காமல், நேரில் யோபுவைச்சந்தித்துக் கலந்துரையாட வந்தனர். உற்றார், சுற்றம், உறவினர், உரியவள் எல்லோரும் ஒதுங்கி விட்ட சூழ்நிலையில், உருத்தோடு வந்தனர் கருத்துள்ள நண்பர்.

நாம் நன்றாயிருக்கும் போது நண்பர்கள் நம்மை அறிவர்; நாம் துன்புறும் வேளையில்தான் நண்பர்கள் யாரென நாமறிவோம்.

உலகம் ஒதுங்கும்போது, உடனடியாக ஓடிவருபவனே உண்மையான நண்பன்.

நல்ல நட்பு பெருமையில் மட்டுமல்ல, சிறுமையிலும், வறுமையிலும், வெறுமையிலும் நிலைத்து நிற்கும்.

மனதுருக்கம்

நொறுக்கப்பட்ட நண்பனிடம் உருக்கத்தோடு வந்தவர்கள் அவன் உருத்தெரியாமல் வாடியிருக்கும் கறுத்த உடலைப் பார்த்து ஒப்பாரிவைத்தனர்; வஸ்திரங்களைக் கிழித்து, வேதனையோடு கதறி, வாரிப் புழுதியைத் தங்கள்மேல் போட்டுக்கொண்டு வருத்தத்தோடு அவனருகில் உட்கார்ந்தனர்.

சரீரத்தில் ஓர் அங்கத்தில் காயமென்றால், அனைத்து அங்கங்களும் துடிப்பதுபோல் கரிசனையும் கண்ணீரும் நண்பர்களை நிரப்பிற்று. *1 கொரி. 12:12-26.* வடியும் தைலமாகவும், இறங்கும் பனியாகவும் இரங்கி நின்றனர் மூவரும். *சங். 133.*

மௌனம்

ஏழுநாட்கள் வரை எதுவும் பேசவில்லை அந்த இனிய நண்பர்கள்; யோபுவும் பேசவில்லை. ஒருவரையொருவர் பார்த்தார்கள்; பரிதாபித்தார்கள்; பெருமூச்சுவிட்டார்கள். யோபுவின் துயரத்தில் தங்களை இணைத்துக்கொண்டார்கள்.

ஏழு நாட்களும் அமைதிகாத்தனர்; மௌனத்தின் மூலமாக மனச்சோர்பைப் பகிர்ந்து கொண்டனர். ஏழு நாட்கள் அமைதியாயிருப்பது என்ன எளிதான காரியமா?

மௌனத்தைப் புரிந்து கொள்பவன் நண்பன்; பகைவரின் பேச்சுக்களை மறக்க முடியும் நண்பர்களின் மௌனத்தை மறக்க முடியாது; வார்த்தைகளைக்குறித்து வருந்த வேண்டியிருக்கும், மௌனத்தைக் குறித்து வருந்தவேண்டியிராது.

யோபு தன் இருதயத்தை திறந்தான் (*அதி. 3*); நண்பர்களும் தங்கள் இருதயங்களைத் திறப்பதற்கு பதிலாகத் தங்கள் இருகாதுகளையும் திறந்தனர்.

வருத்தத்தைப் பகிர்ந்துகொள்ள வந்தவர்கள் வார்த்தைகளைக் கொப்பளிக்கலாயினர். (*4-37*); நிதானமிழந்தனர்; நியாயந்தீர்த்தனர்; நிம்மதியைக் குலைத்தனர்.

உன்னதருக்கும், உருக்குலைத்தவனுக்குமிடையே நடைபெற்ற உரையாடல் அவர்களுக்குத் தெரியாததால், யோபுவின் துன்பங்களுக்குப் பாவமே காரணமென்று முடிவெடுத்து வார்த்தைகளில் தடுமாறினார்கள்; அவனையும் வாயினால் பாவஞ்செய்யவைத்தார்கள்.

தேவனுக்காகப் பரிந்துரைப்பதாக எண்ணித் தேவையின்றி நிதானமிழந்தனர். தேவனால் கடிந்துகொள்ளப்பட்டனர்; விபரமாகப் பார்ப்போம்... ©

3. வியாகுலம்

சில ஆண்டுகளுக்கு முன்னர் -

நியூயார்க்கிலுள்ள ஹேடன் விண்வெளி ஆய்வுக்கூடம் விடுத்த விளம்பரம் அது.

முதன் முறையாக, வேறொரு துருவத்திற்குச் செல்ல விரும்புவோர் விண்ணப்பிக்கலாம் என்று அழைப்பு விடுத்திருந்தனர்.

18000 பேர் விண்ணப்பித்திருந்தனர்.

பூமியை விட்டு பிறிந்தோர் துருவத்திற்குச் செல்ல பெரும்பான்மையோர் விரும்பிய நோக்கம்: இம்மண்ணுலக வாழ்வில் வெறுமையும், வெறுப்புமேயாகும். இன்னோர் உலகத்திலாவது இன்பம் இசைக்காதா என்ற எண்ணமே.

நாமுங்கூட கேள்விப்படுகிறோமே...

"ஏண்டா இந்த உலகத்தில் பிறந்தேனோ என்றிருக்கிறது... என்றைக்குத்தான் எனக்குச் சாவு வரப்போகுதோ...?

"ஏன் என்னை பெத்துத் தொலைச்சீங்க ...? கருவிலேயே என்னை கொன்றிருக்கக் கூடாதா...?

"எனக்கா? நிம்மதியா? செத்தாத்தான் எனக்கு நிம்மதி..."

...மேற்கண்டசொற்கள் வழக்கமாகக் கேட்ட, பழக்கமான வார்த்தைகளா?

காயமே இது பொய்யடா! வெறும் காற்றடைத்த பையடா...!!

இப்படித்தான் யோபுவும் புலம்ப ஆரம்பித்தான். சொத்து, சொந்தம், சுகம், சுதந்திரம் யாவையும் பறி கொடுத்தவன், மெத்தவும் முனக ஆரம்பித்து விட்டான். ஏழு நாட்கள் ஆராதனையிலும், அமைதியிலும் கழித்தவன் எட்டாம் நாள் அங்கலாய்க்கலானான். சாபமும், சந்தேகமும், சஞ்சலமும் சரளமாக அவன் வாயினின்று வழிந்தோடி வரலாயின.

சாபம், 3:1-10.

மும்முறை தன் ஜென்ம நாளைச் சபிக்கிறான் 1,3,8.
பன்முறைத் தான் சாக விரும்புகிறான். 3:11 6:9 7:15 14:13.

தற்கொலை செய்து கொள்ளவோ, தன்னை சூறையாடினவர் களைப் பின்தொடர்ந்து பழிவாங்கவோ எண்ணவில்லை; சபிக்கும் திறமையுள்ளவர்களை நாடுகின்றான், 8.

பிலேயாம் போன்றோர் கூலிக்காகச் சபிக்கும் திறமை பெற்றோர் என்று அந்நாட்களில் கருதப்பெற்றனர். எண். 22:1-24:25.

பிலேயாமின் நாவை ஆண்டவர் பிடித்து வைத்திருந்ததால், சபிக்க வேண்டிய அவனை ஆசீர்வதிக்கிறவனாகச் சர்வ வல்லவர்

மாற்றினார். அவரன்றி ஓர் அணுவும் அசையாது.

பாவத்தினாற் பிறந்த பாரம்பரியச் சாபங்களை முறியடிப்பது எப்படி? மாம்சத்திற் பிறந்த நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும். அவ்வளவு தான்! "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக் கிறான், பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின" 2 கொரி. 5:17.

சந்தேகம், 3:11-23.

நான்கு கேள்விகளோடு தன் நடைப்பிணமான நிலைமையை நடுக்கங்களோடு கேட்கிறான் யோபு.

"பிறந்தது ஏன்?" 11.

தூய்மையான தேவத் திட்டத்திற்கெதிரான கேள்வியிது. வல்ல தேவ ஞானத்திற்கெதிரான வேதனையான வினா அது.

"என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர். நான் பிரம்மிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டப்படியால் உம்மைத் துதிபேன், உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்.

நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்ட போது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை.

என் கருவை உம்முடைய கண்கள் கண்டது, என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாத போதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது." சங். 139:13-16

சங்கீதக்காரரின் சங்கீதங்கள் யோபுவுக்குத் தெரிந்திருந்தால் சந்தேகங்கள் பிறந்திருக்காது.

"பெற்றவள் ஏன்?" 12:2-19.

தாயின் வயிற்றில் கரு உருவாகும் போது, தேவ சாயலும். தேவ சித்தமும், தேவ சுவாசமும் உருவாகிறது.

கருச்சிதைவு கர்த்தருக்கு விரோதமான கொலை! யோபுவோ கருவாக இருந்த தான், அழிந்திருக்கக்கோரி தன்னைப் பெற்ற வளைக் கனவீனம் பண்ணத் துணிகிறான்.

ஐந்தாம் கற்பனையை அவன் அறியானே. யாத். 20:12; உபா. 5:16. எரேமியாவிலும் இந்தப்பிதற்றலைப் பார்க்கிறோம். "நான் பிறந்தநாள் சபிக்கப்படுவதாக, என் தாயார் என்னைப் பெற்ற நாள் ஆசீர்வதிக்கப்படாதிருப்பதாக. உமக்கு ஒரு ஆண் பிள்ளை பிறந்ததென்று என் தகப்பனுக்கு நற்செய்தியாக அறிவித்து, அவனை மிகவும் சந்தோஷப்படுத்தின மனுஷன் சபிக்கப்பட்டவன்" எரே. 20: 14-15.

"பிழைப்பு ஏன்?" 20-22.

"வாழ்வதால் பயனில்லை, சாவதே மேல்" என, இழப்போடு தன் வாழ்வு இறுதியாகிறது என்ற முடிவுக்கு வந்து விட்டான் யோபு. தேவன் அவனுடைய வருங்காலத்தை அறிவார்; தேவனிடம் அவனுடைய வருங்காலம் இருக்கிறது; தேவனே அவனுடைய வருங்காலம்; என்று அவனுக்கு விளக்க யாருமில்லையே.

"நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார், அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக் கேதுவான நினைவுகளே" என்று கர்த்தர் சொல்லும் வார்த்தைகள் நமக்குத் தானே தெரியும். எரே. 29:11.

"பிரகாசம் ஏன்?" 23.

"தன் வழியைக் காணக்கூடாதபடிக்குத் தேவனால் வளைந்துகொள்ளப்பட்டவனுக்கு வெளிச்சத்தினால் பலன் என்ன?"

பலன் உண்டு! சீஷரைச் சிறைப்படுத்தவும், சித்திரவதை செய்யவும், சிரச் சேதம் பண்ணவும், சபைகளைச் சீரழிக்கவும் சீறிச் சென்ற சவுலை வழிமறித்து, வெளிச்சத்தில் வெளிப்பட்ட இயேசுவால் பலன் இருந்ததே!

புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும், பரிசுத்தரின் நாமத்தைப் பிரசித்திப்படுத்த, பிரத்தியேகப் பாத்திரமாகத் தெரிந்து கொள்ளப்பட்டவனாயிற்றே அவன்! அப். 9:1-15.

சஞ்சலம், 24-26.

கதறலோடும், கலக்கத்தோடும், களைப்போடும் தன் புலம்பலைத் தன் வாழ்வின் கடைசி அத்தியாயமாக முடிக்கிறான் யோபு. கடைசி அத்தியாயத்தை எழுதுகிறவர் கர்த்தராயிற்றே! சவுலின் கையினால் சாவேன்! என்று தாவீது சொன்னபடி நடக்கவில்லையே! 1 சாமு. 27:1; 31:4.

இறுதியை நிர்ணயிப்பது இறைவன்!
காலங்கள் கர்த்தருடைய கரத்தில்!!

நாளைய தினத்தைக்குறித்துக் கலங்க வேண்டாம்.
காரணம் - நாளைய தினத்தில் நாதர் இருக்கிறார்.

அவர் -
இருந்தவராகவே இருந்தவரல்லர்!
இருக்கப் போகிறவராக இருக்கப் போகிறவரல்லர்!!
இருக்கிறவராகவே இருக்கிறவர்!!!

எந்நாளும் உங்களோடிருக்கிறவர்.
எந்நாளும் உங்களைக் காக்கிறவர்!

©

4. விவாதம்

எலிப்பாஸின் பிரச்சாரம், 4:1-5:6.

"உங்கள் பிரச்சனையைக் குறித்து ஆவியானவர் எனக்குத் தரிசனத்தில் வெளிப்படுத்தினார். வெள்ளிக்கிழமை தோறும் உங்களுக்காக உபவாசித்து ஜெபிப்பேன். உங்களைச் சுற்றியிருக்கும் கட்டுகள் உடையும்; கஷ்டங்கள் மறையும்; கவலைப் படாதிருங்கள்," என்று சொல்லி, காசு பிரித்துக் கொண்டிருக்கும் கைதேர்ந்த நபர்களை உங்களுக்குத் தெரியுமா?

"கர்த்தர் சொன்னார்!" என்று கதைத்து, தங்களைச் சுற்றிக் குட்டி ராஜ்யங்களைக் கட்டவும், குபேர வாழ்க்கை வாழவும், காசையே குறிக்கோளாகக் கொண்டு கனிந்த மனமுள்ளவர்களை வஞ்சித்து கறந்து வாழும் கர்த்தருடைய விரோதிகளை உங்களுக்குத் தெரியுமா?

எரே. *23:16, 21, 25, 26, 30-32*

எலிப்பாஸின் பேச்சில் பொய்யும், பெருமையும் காணப்படுகிறது.

தத்துவ ஞானிபோலக் காணப்படுமவன், மும்முறை யோபுவிடம் தர்க்கிக்கிறான்; ஞானத்திற்குப் பேர்போன தேமானியன் அவன். எரே. *49:7*.

தயாளம், 4:1-6.

எலிப்பாஸின் ஆரம்ப அணுகுமுறையில் அதிநுட்பமும் மிதயிரக்கமும் விளங்குகிறது. கரிசனையும் கட்டியெழுப்பும் கனிவும் காணப்படுகிறது.

ஆனால் -

போகப் போக வேதாளம் முருங்க மரத்தில் ஏறுகிறது.

தர்க்கம், 4:7-11.

பாரம்பரியமான தன் பட்டறிவின்படி, பாவமே பாடுகளுக்குக் காரணமென்று பச்சையாகச் சொல்லாமல், பழத்தில் ஊசியை இறக்குவது போல பகிர்ந்து கொள்கிறான்.

தரிசனம், 4:12-21.

ஆவியொன்று தனக்குத் தரிசனத்தில் அறிவித்தாக, அதாவது, ஆண்டவரே நேரில் வந்து தனக்கு அறிவித்ததாகப் பொய் சொல்லி, தன் தர்க்க சாஸ்திரத்தை நிலைநாட்டப் பார்க்கிறான்.

ஆவி சொன்னதாகச் சொன்னால்தான் யோபு அஞ்சி அமைவான் என்பது எலிபாஸின் எண்ணம். அப்படிச்சொன்ன அவன் மேல் ஆண்டவர் கோபமூண்டாரே. *42:7*.

ஆவிக்குரிய காரியங்களை உறுதிப்படுத்த ஆயிரத்தெட்டுக் கற்பனைத் தரிசனங்களையும், கள்ளத் தீர்க்க தரிசனங்களையும், கபடான சொப்பனங்களையும், கலக்கும் போதனைகளையுஞ் சொல்லி கர்த்தருடைய சத்தியத்திற்கு நம்மை விலக்க முயற்சிக்கிறவர்களுக்கு விலகி வாழ்தல் வேண்டும்.

தத்துவம், 5:1-16.

வர வர எலிப்பாஸின் பேச்சில் தயாளம் மறைந்து, தர்க்கம் நிறைந்தது; உதடுகள் பேசியது, உள்ளமோ கூசியது; அன்பு நீங்கியது, அம்பு நிமிர்ந்தது.

பாவிகளுக்குத் தண்டனை நிச்சயம்; யோபுவின் பாடுகளுக்குக் காரணம் பாவமே என்பது தான் எலிப்பாஸின் விவாதம். சர்வ வல்லவருக்கும் சாத்தானுக்கும் நடைபெற்ற உரையாடலை அறியாதவன் அவன்!

பிறவிக் குருடனின் குருட்டாட்டத்திற்கு அவன் பாவம் காரணமல்ல என்றும், கலிலேயர் மாண்டதற்கும், சீலோவாம் மரணங்களுக்கும் பாவம் காரணமல்ல என்பதை அறிவோம். யோவா. 9:1-3; லூா. 13:1-5.

தலைக்கனம், 5:17-27.

ஒருவனை நிர்மூடன் என்று சொல்ல எலிப்பாஸூக்குத் தகுதியுண்டோ? 5:3. எரிநரகமன்றோ அதன் பிரதிபலன்? மத். 5:22. அவனைச் சபிக்க இவன் யார்? ஆசீர்வதிப்பதன்றோ ஆவிக்குரியவன் கடமை? மத். 5:44.

"நான் கண்டிருக்கிறபடி..." என்று ஒருமையில் ஆரம்பித்தவன், "நாங்கள் ஆராய்ந்து அறிந்தது இது தான்" என்று பெருமைப் பன்மையில் முடிப்பது எத்தனைப் பெரிய தலைக்கனம்?

வள வளவென்று பேசி, யோபுவை ஆசீர்வதிப்பதுபோன்று, தன் ஆணவத்தையே காட்டுகிறான் எலிப்பாஸ். மனந்திரும்பினால் மறுவாழ்வு உன்டென்று நம்பிக்கையையூட்டித் தன் தும்பிக்கையைத் தூக்குகிறான்.

யோபுவின் பதில்

இருவருக்குத் தன் பதிலைத் தெரிவிக்கிறான் யோபு.

முதலாவது நண்பருக்கு! 6:1-30.

சஞ்சலம், 1-13.

கடற்கரை மணலிலும் பாரமான தன் துக்கம் தேவனால் வந்ததென்று சொல்லி, தன்னை அவர் சாகடித்தால் நலமெனக் கருதுகிறான்.

சிநேகிதம், 14-30.

தன் சிநேகிதர் தங்கள் வார்த்தைகளால் தன்னை வேதனைப் படத்திச் சத்துருக்களாக மாறி வருவதைக் கண்டு அங்கலாய்க்கிறான் யோபு.

"எனக்கு உபதேசம் பண்ணுங்கள்... தெரியப்படுத்துங்கள் ... என்னை நோக்கிப் பாருங்கள் ... திரும்புங்கள்... திரும்புங்கள்... என்று அவர்களுடைய ஆறுதலான வார்த்தைகளை ஆதூரத்தோடு வாஞ்சிக்கிறான். வச. 24,28,29.

இரண்டாவதாக நாதருக்கு!! 7:1-21.

மூன்று முக்கியமான காரியங்களைத் தேவனுக்குத் தெரிவிக்கிறான் யோபு.

மாயை, 1-6.
மனித வாழ்வு மாயையென்றும், நிழல்போன்ற அவ்வாழ்வில் நிம்மதியில்லையென்றும், நம்பிக்கையற்ற முடிவையே தான் எதிர்பார்திருப்பதாகவும் அரற்றுகிறான்.

மனக்கசப்பு, 7-19.

"என் கண்கள் இனி நன்மையைக் காணப் போகிறதில்லை, என்று கூறி, ஆவியின் வேதனையினாலும், ஆத்துமத்தின் கசப்பினாலும் அங்கலாய்க்கிறான், 7,11.

அது அவிசுவாச அறிக்கையல்ல; அங்கலாய்ப்பின் அழுகை!

"என் மீட்பர் உயிரோடிருக்கிறார்... நான் அறிந்திருக்கிறேன்... நானே பார்ப்பேன்..." என்று ஆழ்ந்த விசுவாச அறிக்கையிட்டவனன்றோ அவன்? 19:25-27.

இவ்வுலக வாழ்விலும்இரட்டிப்பான நன்மைகளைப் பெற்றவனாயிற்றே அவன்? 42:10-17.

7:17-18 வசனங்கள் தாவீதின் வார்த்தைகள்போன்று விளங்குகின்றன. சங். 8:4; தாவீதின் வார்த்தைகள் ஆச்சரியப்பட்ட வார்த்தைகள்; யோபுவின் வார்த்தைகளோ அங்கலாய்ப்பின் வார்த்தைகள்!!

மன்னிப்பு, 20-21.

மூன்று வினாக்களைத் தேவனுக்கு முன் வைத்து மன்னிப்புக் கோருகிறான் யோபு.

- பாவஞ்செய்தேனானால் உமக்கு நான் செய்ய வேண்டியது என்ன?
- நீர் என்னை உமக்கு இலக்காக வைத்தது என்ன?
- என் மீறுதலை நீர் மன்னியாமலும், என் அக்கிரமத்தை நீக்காமலும் இருக்கிறது என்ன?

எத்தனை அருமையான தற்பரிசோதனைக் கேள்விகள்! தற்பரிசோதனை தற்பரன் இயேசுவின் தயவைத் தந்து தகைசான்ற இரட்சிப்பைத் தவறாது அருளும். சங். 139:23-24.

பில்தாத்தின் படபடப்பு : 8:1-22.

"ஈரெட்டு" என்ற ஒரு பாம்பு தென் ஆப்பிரிக்காவில் உண்டு. அது கடித்தால், கடிபட்டவன் இரண்டு எட்டுக்கள் எடுத்துவைப்பதற்கு முன் இறந்து விடுவான்.

அதன் கொடு விஷம் நரம்பு மண்டல முழுதும் கடிதில் பரவி இருதயத் துடிப்பை நிறுத்தும்.

அந்தத் தென் ஆப்பிரிக்கப் பாம்பை விட கொடிய நஞ்சு நாவில் உண்டு.

உறவுகளை அழிக்கவும், உள்ளன்பைக் குலைக்கவும், மனதைக் கெடுக்கவும், மதிப்பைச் சீர் குலைக்கவும், விசுவாசத்தைப் பாழாக்கவும், விலையேறப்பெற்ற பரிசுத்தத்தைக் கறைப்படுத்தவும் விஷம் போன்ற வார்த்தைகளின் விளையாட்டால் முடியும்.

நாவின் மாறுபாடு ஆவியை நொறுக்குமே!

காற்றைப் போன்ற வார்த்தைகள் யோபுவின் சொற்கள் என்று சொல்லி, சேற்றைப் போன்ற வார்த்தைகளை வாரி இறைக்கிறான் பில்தாத். பாரம்பரியப் பற்றுள்ள இவன், பலதுறைகளில் படித்தவன்; சமாதானம் பேச வந்த இவன், சட்டம் பேசுகிறான்; நீதி தேவனின் சார்பில், தானே நியாயந்தீர்க்க முற்படுகிறான்.

நிந்தனை, 8:1-7.

"பாவத்தைத் தண்டிக்கிறார் தேவன், மனந்திரும்பினால் மறுவாழ்வு உண்டு!" என்று நியாயம் பேசினாலும், யோபுவின் குற்றங்களே அவனுக்குக் கஷ்டங்களைக் கொண்டுவந்திருக்கின்றன என்று மறைமுகமாகக் குறை கூறுகிறான்.

நிகழ்வினை, 8-19.

முன்னோருடைய உபதேசமும், மண்ணிலுள்ள அவமானங்களும் யோபு சிந்திக்க வேண்டியவை. சேறில்லா நாணலும், நீரில்லாக் கோரைப்புல்லும், சிலந்தியின் பின்னலும், நிலையற்ற தாவரமும் நினைவிற் கொள்ள வேண்டியவை.

நிபந்தனை, 5-7,20-22.

"யோபு மனந்திரும்பி விண்ணப்பித்தால் மறுவாழ்வு பரிபூரணமாய் வந்து சேரும், மகிழ்ச்சியும் மகிமையும் நிறைவாகும்," என்று நிபந்தனையோடு உபதேசிக்கிறான் பில்தாத்.

உபத்திரவப்படுகிறவனுக்கு உதவி தேவை என்பதை மறந்து உபதேசிக்கும் உபாத்தியனாக மாறி விட்டான் அவன்.

யோபுவின் பதில் :

ஒன்பதாம் அதிகாரத்தில் நண்பனுக்கும், பத்தாம் அதிகாரத்தில் நியாயாதிபதிக்கும் பதிலளிக்கிறான் யோபு.

நண்பனுக்கு, 9:1-35.

யோபுவின் துன்பகரமான சொற்களை அவன் பதிலில் பார்க்கிறோம். தனக்கு நீதியைக் கோரி, தேவனை நீதிமன்றத்திற்கழைத்துத் தன் நிர்ப்பந்தமான நிலையைக் குறித்து வழக்காட ஒரு வக்கீல் தேவையென வாஞ்சிக்கிறான்.

நீதி, 1-15.

யோபு தன்னை நீதிமானாக்க முடியாது; தேவனே நியாயாதிபதி; எனவே நீதிபதிக்கு முன்னால் இரக்கத்துக்காகக் கெஞ்சுகிறான்.

நீதி மன்றம், 16-35.

தெய்வம் துன்பத்தின் காரணரோ வெனத் தவித்து வழக்காடுகிறான் யோபு. நீதிமன்றத்தில் பரிமாறப்படும் சொற்கள் நிறையவே அவன் வாயினின்று வெளிவருகின்றன.

"வழக்காட ... உத்தரவு ... மறுமொழி... நியாயாதிபதி...இரக்கத்துக்கு க் கெஞ்சுவேன் ... விண்ணப்பம் ... முகாந்தரம்... நியாயம்... பட்சத்தில் சாட்சி ... குற்றவாளி... உத்தமன் ... சவுக்கு ... பிரதியுத்தரம்... மத்தியஸ்தன்... தீர்க்காதிரும் ... கிண்டிக்கிளப்பி... ஆராய்ந்து விசாரிக்கிறதற்கு... தப்புவிக்கிறவன்... விசாரித்து... சுமத்தாமல் விடீர்..." போன்ற வார்த்தைகள் வழக்குமன்ற வார்த்தைகள்.

தனக்கு ஒரு மத்தியஸ்தன் தேவையென்று தெரியப்படுத்துகிறான் யோபு; நமக்கோ இயேசு கிறிஸ்து என்னும் ஒரே மத்தியஸ்தர் உண்டு. எபி. 4:15-16, 7; 24-25; 1தீமோ.2:5-6.

நியாயாதிபதிக்கு, 10:1-22.

மத்தியஸ்தன் தனக்கு இல்லாததால் மனமடிந்து மருளுகிறான் யோபு.

நிர்ப்பந்தம்

தனக்கு ஒரு மத்தியஸ்தன் இல்லாததால் தானே தேவனோடு வழக்காடவேண்டியிருக்கிறதென்று முடிவெடுத்து, சாடுகிறான்.

தான் துன்மார்க்கன் அல்ல என்று தேவனுக்குத் தெரியும் என்பது யோபுவின் ஆணித்தரமான நம்பிக்கை. இருப்பினும் தன்னை அவர் அழிக்க ஆசிப்பது ஏன் என்பது தான் அவனது அங்கலாய்ப்பின் கோரிக்கை.

"வாழ்க்கை ஒரு விரயம்!" என்பதே யோபு எடுத்த தீர்ப்பு.

உறங்காமலும், தூங்காமலும் இருபத்து நான்கு மணிநேரமும், கண் விழித்து கரிசனையோடு காப்பாற்றும் கர்த்தருடைய கரங்கள் இமைப்பொழுது மறைந்ததையும், ஆனாலும் உருக்கமான இரக்கங்களால் சேர்த்துக் கொள்ளப்படப் போவதையும் இனித்தானே அறியப்போகிறான்! ஏசா. 54:7.

சோப்பாரின் பட்டயம், 11:1-20.

எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றுகிறவன் பில்தாத் என்றால், வெந்த புண்ணில் வேலைப் பாய்க்கிறவன் சோப்பார்.

"அறிந்து கொள்ளும்!" "அறியீரா?" என்று ஆச்சரியப்பாணியில் அதட்டிப் போதிக்கும் அதிகப்பிரசங்கி அவன். 11:6;20:5.

இருமுறைக்கு மேல் அவன் பேச இடங்கொடுக்கவில்லை இறைவன்.

கனிவான இருதயத்தோடு கேட்க வேண்டியவன், கடினமான காதுகளால் கேட்டுக்கொண்டிருந்தான்.

அக்கிரமம், 1-4,10-12.

யோபுவின் துன்பங்களுக்கு அவன் அக்கிரமமும், அடங்காமையுமே காரணமென்றும், அவன் காட்டுக் கழுதைக்குட்டிக்கு ஒப்பானவன் என்றும் கண்டபடிக் குற்றஞ்சாட்டுகிறான் சோப்பார்.

அறியாமை, 5-9.

ஆண்டவருடைய ஞானத்தையும் வல்லமையையும் அறியாதவன் யோபு. அவருடைய நியாயத்தீர்ப்புக்கு அவன் தப்ப முடியாது.

ஆயத்தம், 13-20.

ஆனாலும் யோபுவுக்கு நம்பிக்கைக்கு வாய்ப்புண்டு. நான்கு காரியங்களை அவன் செய்தால் நல்வாழ்வு அவனுக்கு நிச்சயம்.

ஆயத்தமுள்ள இருதயம், ஆண்டவரை நோக்கிக் விரிப்பு, அக்கிரமம் அகற்றல், அநியாயம் நீக்கல்!

சோப்பாரின் கரிசனை சரியானது; கண்டனமோ பிழையானது. ஆலோசனை முறையானது; ஆனால் ஆண்டவருக்கும் அலகைக்குமிடையேயுள்ள சவாலை அவன் அறியானே.

யோபுவின் பதில் :

குறுகிய எண்ணமும், குற்றஞ்சாட்டும் இருதயமுமுள்ள குடும்ப நண்பர்களுக்குக் குமுறும் வார்த்தைகளைக் கொப்பளிக்க ஆரம்பித்து விட்டான் யோபு.

ஆட்சேபம், 12:1-8.

'பரிசுத்தன் பரியாசம் பண்ணப்படுகிறான், கள்ளருடைய கூடாரங்களில் செல்வமுண்டு," என்று சொல்லி சோப்பாரின் சொற்களை ஆட்சேபிக்கிறான் யோபு. யோசேப்பு, எரேமியா, தாவீது, தானியேல், போன்ற பக்தர்கள் இடுக்கமான வாசல்வழியாய்க் கடந்து வந்தவர்களாயிற்றே.; அன்னாவும், காய்பாவும், ஏரோதும், பிலாத்தும் இரட்சகரைப் பரியாசம் பண்ணியவர்களாயிற்றே.

நிந்தித்த நண்பர்களின் சொற்களை நிராகரித்தாலும், நேசக் கர்த்தரை நோக்கிப் பிராத்திக்கிறான் யோபு.

ஆளுகை, 9-25.

ஆண்டவரைப் பற்றிய தன் அறிவை அறிக்கையிடுகிறான் யோபு.

தேவன் -

- வாழ்வின் இருப்பிடம், 7-10; ரோ. 1:19-20.
- ஞானத்தின் உறைவிடம் 11-13; 28:28; நீதி. 1:7; 9:10; சங். 111:10
- வல்லமையின் வகிப்பிடம் 13 - 25.

அறிக்கை, 13:1.

சிநேகிதருக்குத் தெரிந்ததெதுவும் தனக்குத் தெரியாததல்லவெனக் கருதிய யோபு, சர்வ வல்லவரோடு மட்டும் வழக்காட விரும்புகிறான்; வழக்காட விரும்பினாலும், விசுவாசத்தை விட்டு விடவில்லை இந்த விலையேறப்பெற்ற முத்து.

"அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்!" என்பது யோபுவின் இணையற்ற இமாலய அறிக்கை; அதுவே என்னுடைய இதயத்தின் இலட்சிய அறிக்கையுங்கூட!

சாத்ராக்,மேஷாக்,ஆபேத்நேகோவின் ஆணித்தரமான அறிக்கையும் எதிரொலிக்கிறதல்லவா?

"நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களை ... அக்கினிச் சூளைக்கு ... விடுவிக்காமற்போனாலும் நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது! " என்று சூளுரைத்தார்களே. தானி. 3:17, 18.

"அவரே என் இரட்சிப்பு ! என்பது யோபுவின் விசுவாசப் பிரமாணம்," 16.
இருப்பினும் யோபு இருமனுக்களை வைக்கிறான், 21.

1. கையைத் தூரப்படுத்தும்

- ஆண்டவருடைய கை ஆசீர்வதிக்கும் கை. சங். 145:16;
- அரவணைக்கும் கை. சங். 37:23-24;
- அற்புதஞ் செய்யுங் கை. சங். 105:6;
- அதிசயமாய் வழிகாட்டும் கை. சங். 139:10

ஆனால் -

பாவத்தை அடக்கி வைத்தால், பாரமான கை. சங். 32:3, 4.

2. கலங்கப்பண்ணாதிரும்

காற்றடித்த சருகை நொறுக்கவும், காய்ந்து போன துரும்பைத் தொடர்வதும், கசப்பான தீர்ப்புக்களை எழுதுவதும், கால்களைத் தொழுவடித்துப் போடுவதும், காவல் பண்ணுவதும்,காலடிகளில் அடையாளத்தைப் பதிப்பதும் கர்த்தாவே வேண்டாமெனக் கதறுகிறான் யோபு.

அவ நம்பிக்கை, 14:1-22.

அவநம்பிக்கை அறிவுப் பிரச்சனை !
அவிசுவாசம் ஆவிக்குரிய பிரச்சனை!!

அவநம்பிக்கை ஆண்டவருடைய வசனத்தால் தீரும்;
அவிசுவாசமோ ஆண்டவரை ஏற்றுக்கொள்வதால் மட்டுமே தீரும்.

யோபுவின் அவநம்பிக்கை -

மறுநாளில்! 1-9.,

மறுநாளைக் குறித்துக் கவலைப்படுவதும், பெருமை பாராட்டுவதும் மனுஷருக்குத் தவிர்க்கப்பட்டிருக்கிறது. மத். 6:34; நீதி. 27:1.

மறுவாழ்வில்! 10-14.

கல்லறை கடந்த வாழ்வு உண்டு; கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டு. லூக். 16:19-23; யோவா.3:16; உயிர்த்தெழுதலின் நம்பிக்கையில் உயிர்வாழ்கிறவன் விசுவாசி. 1 கொரி 15:58.

அந்த நம்பிக்கை யோபுவுக்கு இருந்தும், ஆங்காங்கே அங்கலாய்க்கிறான். 19:25-27.

மன்னிப்பில்! 15-17.

முத்திரைப் போடப்பட்டு மூட்டையாகக் கட்டப்பட்டதன் மீறுதல்கள் மன்னிக்கப்பட வேண்டும் என மன்றாடுகிறான் யோபு. தன் பாடுகளுக்குக் காரணம் தன் பாவமே என்று சந்தேகிக்க ஆரம்பித்து விட்டான். சர்வ வல்லவரே அவனுக்குக் கொடுத்த சான்றிதழ்கள் அவனுக்குத் தெரியுமா? 1:1,8; 2:3.

மனந்திரும்பிய பாவிக்கு மன்னிப்புண்டு, மனச்சமாதான முண்டு; மறுவாழ்வுண்டு. சங். 51:16-17, ஏசா. 38:17; 43:25; மீகா. 7:19; எபே. 1:5-7; கொலோ. 1:13-14.

மாம்சத்தில், 18-22.

மாம்சத்தில் இருக்கும் வரை மனுஷனுக்கு நிம்மதியில்லை; மரணமே துன்பத்தை மூடும்! என்பது யோபுவின் மனத்தாங்கல்.

கிறிஸ்துவுக்கு வெளியே நம்பிக்கையில்லா முடிவு !
கிறிஸ்துவுக்குள்ளே முடிவில்லா நம்பிக்கை !!

"பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவிதச் சந்தோஷத்தினாலும் சமாதானத்தி னாலும் உங்களை நிரப்புவாராக! ரோ. 15:13;1 பே. 1:4;

எலிப்பாஸின் பரியாசம், 15:1-35.

தன் முதல் உரையில் பாசத்தைக் காண்பித்த எலிப்பாஸ், இந்த இரண்டாஞ் சுற்றில் பரியாசத்தைக் காண்பிக்கிறான். 16:20,17:2. தேவனுடைய சார்பில் தன்னை நியாயாதிபதியாக நிறுத்திக் கொண்டு இரு குற்றச்சாட்டுகளை யோபுவுக்கு எதிராக வைக்கிறான் எலிப்பாஸ்.

அறிவின்மை, 1-6.

பயனற்ற சொற்கள், பயபக்தியின்மை, பிராத்தனைக்குறைவு, பாவமுள்ள நாவு போன்றவை யோபுவைக் குற்றவாளியாகத் தீர்ப்பதாகக் குறை கூறுகிறான். இந்த குற்றச்சாட்டு ஒரு கற்பனைப் பட்டியல்; கர்த்தருடைய கணிப்பை அவன் அறியானே.

அனுபவமின்மை, 7-10.

அறிவில்லாத யோபுவுக்கு அனுபவமில்லை என்று ஏளனம் பண்ணுகிறான். "நாங்கள்", "எங்களுக்கு," "எங்களுக்குள்ளே", என்று பெருமைப் பன்மையோடு, பாரம்பரியப் பெருமையோடு பெரிதாய் வாயைத் திறக்கிறான்.

யோபுவின் பதில், 16:1-17:16.

தன்னுடைய இடத்தில் நண்பர்கள் இருந்தால், தான் அவர்களுக்குத் திடன் சொல்லித் தெரியப்படுத்தக் கூடும் என்று அறிவித்த யோபு மூன்று காரியங்களை வேண்டுகிறான்.

மனதுருக்கம், 16:1-18.

பரியாச உதடுகளைத் தவிர்த்து பரிவுடன் பேசும் உள்ள உருக்கத்தையும், உதட்டில் இரக்கத்தையும் நாடுகிறான்.

மத்தியஸ்தர், 16:14-21.

நண்பரோடும், நாதரோடும் வழக்காடத் தன்னால் முடியாததால், இறைவனோடு வழக்காட இன்னொருவரைத் தேடுகிறான்.

மரணம், 16:12-16,18,22;17:16.

நடைப்பிணமான நரக வாழ்க்கையில், ஆறுதலான வார்த்தைகளோ, ஆண்டவருடைய பதிலோ இல்லாததால், நண்பர்களை வழியனுப்புகிறான்; நல்மரணத்தை வரவேற்கிறான்.

பிறப்பையும், இறப்பையும் நிர்ணயிப்பவர் இறைவன்; பரலோகத்தில் நமக்காகப் பரிந்துரைக்கும் ஒரு பிரதான ஆசாரியர் இருக்கிறாரே. எபி.6:20;7:25.

பில்தாத்தின் பயமுறுத்தல், 18:1-21.

"பயங்கரம்" என்ற பட்டயத்தை எடுத்துப் போர் தொடுக்க ஆரம்பித்துவிட்டான் பில்தாத். 13-15. யோபு புத்தியற்றவன்; பொறுப்பில்லாதவன் எனக்கருதி, சரமாரியாகச் சாபமிடுகிறான்.

அணையும் விளக்கு, அவியும் நெருப்பு, அகப்படுத்தும் வலை, அலையும் கால்கள், அழிக்கும் பசி, ஆயத்தமாக்கப்பட்ட கேடு, அகோரமான வேந்தன், அழிக்கப்படும் வேர்கள், அகலும் வெளிச்சம், அறியாமற்போனவனுடைய வாசஸ்தலம் என்று வலிய மரணத்தின் வடிவங்களை அடுக்கிக்கொண்டே போகிறான்.

மரண பயந்தான் யோபுவுக்கு இல்லையே; இருப்பதைவிட இறப்பதே மேல் என ஏற்கனவே துணிந்து விட்டானே.

கிறிஸ்து ஒருவனுக்கு ஜீவனாயிருந்தால், சாவு அவனுக்கு ஆதாயமாயிற்றே. பிலி. 1:21.

யோபுவின் பதில், 19:1-29.

எலிப்பாஸ், பில்தாத், சோப்பார், எலிப்பாஸ். பில்தாத்... என இதுவரை ஐந்து முறையே யோபு அசட்டைபண்ணப் பட்டிருக்கிறான். ஆனால், "இப்பொழுது பத்துத்தரம் என்னை நிந்தித்தீர்கள்," என்று யோபு சொல்வதிலிருந்து, "பலமுறை" அவர்கள் பேசியிருக்கலாம் என்றோ, பத்துமுறை அவர்கள் பேச்சால் யோபுவின் உள்ளம் பாதிக்கப்பட்டிருக்கலாம் மென்றோ."பத்து" என்ற பதத்தை "மிகை" அணிச் சொல்லாகவோ கருதலாம். பத்துமுறைப் பேசப்பட்டு, ஐந்து உரைகள் யோபு நூலில் தவறியுமிருக்கலாம்.

உதாசீனம், 1-5.

உத்தம நண்பர்களால் தான் உதாசீனப்பட்டதாக உரைக்கிறான் யோபு. அவர்களுடைய வார்த்தைகளால் நொறுக்கப்பட்டு வருத்தமிக மொழிகிறான்.

உருவங்கள், 6-12.

தேவனே தன் மீது போர் தொடுத்ததாகக் கருதும் யோபு, அவருடைய வலை வீச்சு, வழியடைப்பு, மகிமை நீக்கம், மணிமுடி அகற்றல், நான்கு பக்கமும் நாற்றம், நம்பிக்கையின் நீக்கம், எரியும் கோபம், எதிரிகளின் முற்றுகை ஆகியவற்றிற்கு ஆளாகியிருப்பதாக அங்கலாக்கிறான்.

உறவினர், 13-24.

உற்றார் உறவினரால் அசட்டைப்பண்ணப்பட்டுத் தனிமையில் தவிக்கும் யோபு, உற்ற மனைவி கூட தன் சுவாசத்தால் ஒதுங்கி நிற்பதாகக் கூறுகிறான்; பட்சமுள்ள தேவனே தன்னைப் பட்சித்துவிட்டதாகப் பரபரக்கிறான்.

தன் வார்த்தைகள் எழுதப்பட்டால், புத்தகமாக வரையப்பட்டால், கருங்கல்லில் பதிக்கப்பட்டால் நலமாயிருக்கும் என ஆசிக்கும் யோபுவே, யோபுடைய சரித்திரத்தின் ஆசிரியராக இருந்திருக்கலாம். அது எழுதப்படத்தக்க வாஞ்சையும், வயதும், வார்த்தை வளமும் அவனிடத்திலிருந்தது.

உயிருள்ள மீட்பர், 25-29.

உயிருள்ள மீட்பரைத் தான் தரிசிக்கப்போவதாக அறிவிக்கும் யோபுவின் விசுவாச அறிக்கை விசேஷமானது. இயேசுவின் இரட்சிப்பு , இரண்டாம் வருகை, நியாயத்தீர்ப்பு, நித்திய ஜீவன் ஆகியனவற்றை உள்ளடக்கிய உன்னத அறிக்கை அது.

"மீட்பர்" என்ற சொல் எபிரெய மொழியில் "கோயல்" என்பதாகும். நெருங்கிய உறவினர்,மீட்கும் உறவினர், சுதந்திர வாளி" என்று அச்சொல் பொருள்படும். எண். *35:16-28.*

குடும்ப உறவினரின் படுகொலைக்காகப் பழிவாங்குபவராகவோ, ஓர் ஆளையோ, சொத்தையோ, விடுவித்து மீட்பவராகவோ, அவர் விளங்குவார். லேவி. *25:48-49.* விதவையை மணந்து அவளது மரித்த கணவனுடைய பெயர் விளங்க வாரிசு வழங்குபவராகவும் விளங்குவார். ரூத். *4:3-6.*

உடன்படிக்கை மக்களாகிய இஸ்ரவேலரை எகிப்திலிருந்து மீட்டு வந்த யேகோவா தேவனும் அவர்களுக்குக் "கோயல்" மீட்பராவர். யாத். *6:6.* அப்பேர்பட்ட தெய்வம் தன்னையும் மீட்டு. தாங்கி அரவணைத்துத் தரிசனம் அருள்வார் என்பது யோபுவின் திண்ணிய எண்ணம். சங். *72:14.*

இயேசு கிறிஸ்துவோ, நம்முடைய மீட்பராகவும், மத்தியஸ்தரா கவும் இருக்கிறார். *1* தீமோ. *2:5-6*; எபி. *4:15-16;7:24-25.*

சோப்பாரின் பதற்றம், 20:1-29.

அமேஸான் ஆற்றில் அம்பு மீன்கள் வாழ்கின்றன. ஆற்றோரங்களில் நிற்கும் மரங்களில் தங்கும் பறவைகள், பூச்சிகளைத் தம் வாயில் நீரால் மின்னெலென அம்பு போல வேகமாய்ப் பாய்த்து; விழ்த்தி விழுங்குமாம்.

அம்பு மீனின் வாய் ஆபத்தானது.

சோப்பாரின் வாயும் அம்புமீனாய் மாறுகிறது. கரிசனையை விடக் கண்டனமே அவன் வாயினின்று வெளிவருகிறது, 1-3. சிந்தனைகள் ஏவ, சித்தந்தடுமாறி தீவிரித்துப் பேசத் துணிகரங் கொள்கிறான். வார்த்தைகளில் பதறும் அவனை இன்னொருமுறைப் பேச அனுமதிக்கவில்லை பிதா.

சந்தோஷம், 4-9.

துன்மார்க்கனின் கெம்பீரமும் குதூகலமும், மேன்மையும், மகிமையும் மேகங்கள் மட்டும் எட்டினாலும் சொப்பனம் போன்றும், தரிசனம் போலவும் அழிந்து போகும்மென்பதே அவனது எண்ணம்.

சகாயம், 10.

அவன் பிள்ளைகள் சகாயந்தேட பறித்ததைத் திரும்பக் கொடுக்க வேண்டியதாகும்.

சரீரம், 11-25.

உடலின் அங்கங்கள் வியாதிப்படும்; உணவில் பற்றாக் குறையுண்டாகும்; உக்கிர கோபம், உருக்கு வில், உருவின பட்டயம், உருமாற்றம், உள்ள வியாகுலம் எல்லாம் உண்டாகும்.

சம்பத்து, 26-29.

ஆரிருளும். அவியாத அக்கினியும் பட்சிக்க, வானமும் பூமியும் விரோதமாக எழும்ப, ஆஸ்திகள் கரைந்து ஆயுள் குறைந்து விடும்.

ஆனால், நீதிமான்களும் இளமையிலேயே இழக்கின்றனர்; இறக்கின்றனரே! ஆபேலும் உரியாவும், ஸ்தேவானும் இளமையிலேயே இறந்தவர்களாயிற்றே. சோப்பாரின் சொற்களில் ஓரளவு உண்மையுண்டு; ஆனால் பேரளவு தவறு உண்டு.

யோபுவின் பதில், 21:1-34.

வாயைப் பொத்திக் காதுகளைக் கடன் கொடுங்கள் என்று வேண்டி தன் வசனத்தையும், வருத்தமிகு வதனத்தையும் கவனிக்கக் கோருகிறான் யோபு. சோப்பாரின் சொற்களை யோபு அங்கீகரித்தாலும், அவன் குற்றச்சாட்டுகளை மறுத்து, அவற்றிலுள்ள உண்மைக் கேடுகளைச் சுட்டுகிறான், 1-6.

சந்ததி, 7-20.

துன்மார்க்கரின் சந்ததி செழித்துச் சந்தோஷமாயிருக்கிறது. செல்வவான்களாக அவர்கள் செழித்து வாழ்ந்தாலும், இமைப்பொழுதில் அவர்கள் பாதாளத்தில் இறங்குகிறார்கள்; சடுதியில் அவர்கள் விளக்கு அணையும்; சர்வவல்லவருடைய உக்கிரத்தை அவர்கள் குடிப்பர்.

சரிசமம், 23-34.

உயர்ந்தோரும் தாழ்ந்தோரும் சரிசமமாய்ச் சாகிறார்கள்; மரணம் எல்லா மனிதருக்கும் பொதுவானது.

கிறிஸ்துவுக்குள் மரிப்போர் பாக்கியவான்கள்; கிறிஸ்துவின்றி மரிப்போரோ அபாக்கியவான்கள்.

எலிப்பாஸின் பலவந்தம், 22:1-30.

பாசத்தோடு ஆரம்பித்த எலிப்பாஸ், இரண்டாம் உரையில் பரியாசம் பண்ணி, இம்மூன்றாம் சுற்றில் பலவந்தம்பண்ணிப் பொய்க் குற்றச் சாட்டுகளைப் பரப்புகிறான்.

பறிக்கிறான், 1-10.

இரக்கத்தை இழந்து இருப்பதைப் பறித்ததினால் யோபுவுக்கு இடர் வந்தது; இருள் சூழ்ந்தது; இடுக்கண் மிகுந்தது.

பரிதாபத்திற்குரியவன், 11-20.

யோபு பரிதாபத்திற்குரியவனாதலால் அவன் மனந்திரும்பி, மறைப் பிரமாணங்களைக் கைக்கொள்ள வேண்டும். அவ்வாறாயின் அவன் பிழைப்பான்; பிரகாசமடைவான் என்று பிரசங்கிக்கிறான் எலிப்பாஸ்.

யோபுவின் பதில் : 23:1-24:25.

எலிப்பாஸின் குற்றச்சாட்டுகளை எள்ளளவும் பொருட்படுத்தாமல், யேகோவாவுடன் வழக்காட எத்தனிக்கிறான் யோபு.

மறைந்து கொள்ளும் தேவன், 1-9.

தன்னை விட்டுத் தெய்வம் மறைந்து கொள்வதாக யோபு தர்க்கிக்கிறான்; சர்வவல்லவரைச் சந்தித்தால் அவரோடு வழக்காடித் தப்பித்துக்கொள்ளலாம் என்று தவிக்கிறான்.

எங்கும் வியாபித்திருக்கும் தெய்வம் என்றும் மறைவதில்லை என்று அவனுக்குத் தெரியாதா? சங். 139:7-12.

மனிதனே தன்பாவத்தால் அவரை விட்டு மறைந்து கொள்கிறான். ஆதி 3:1-9. விசுவாசியே தன் கீழ்ப்படியாமையால் விலகி போடுகிறான். யோனா. 1:1-3.

மருளவைக்கும் தேவன், 10-17.

சோதிக்கும் தேவனை விட்டு பின் வாங்காமல், சுவடுகளைப் பற்றிப் பிடித்து, சத்தியத்தை அதிகமாய்க் காத்துக்கொண்டு சன்மார்க்கமாய் வாழ்ந்தாலும், இருதயத்தை இறைவன் இளக்கரிக்கப்பண்ணுகிறார் என்று ஏங்குகிறான் யோபு.

மருளவைப்பவர் தெய்வமல்ல; மடிவுண்டாக்கம் பிசாசே. ஆண்டவருக்குச் செவிகொடுப்போர் ஆக்கினைக்கு அஞ்சாது அமைதியாயிருப்பர். நீதி 1:24-33.

ஆண்டவருக்கு பயப்படுகிறவன் அவருக்கோ, அடுத்தவருக்கோ அசம்பாவிதங்களுக்கோ அஞ்சான்; ஆண்டவருக்கு பயப்படாதவன் அனைத்திற்கும் அஞ்சுவான்.

மனம் மாறாத் தேவன், 13.

தேவன் ஒரே மனமாயிருப்பவர்; தம் சித்தப்படிச் செய்பவர்; சோதித்துப் பொன்னாக விளங்கச் செய்பவர் என்பது வியாகுல வேளையிலும் யோபு விளக்கும் விசுவாச வார்த்தைகள், 10.

விசுவாசம் சோதிக்கப்பட்டு வியத்தகும் பொன்னாக விளங்கும் என்பது விசுவாசிகள் படிக்க வேண்டிய பாடம். 1 பே. 1:7; 2 கொரி. 13:5-7.

மலைக்க வைக்கும் தேவன், 24:1-25.

தன் இழப்புகளைச் சாடையாக எடுத்துக்காட்டி, துன்மார்க்கரோ செழித்துக் கொழுத்துத் திரிவதையும், முடிவில் மற்றவர்களைப் போல மடிவதையும் காணும் யோபு, தேவ செயலாற்றுதல்களை எண்ணி மலைக்கிறான். நீதி தேவன் எங்கே என்பதுதான் யோபுவின் நிதானமற்ற கேள்வி.

பில்தாத்தின் பிரசங்கம், 25:1-6.

"சுருக்கமாகப் பிரசங்கிக்கிறவர்கள் பாக்கியவான்கள்! அவர்கள் திரும்பவும் அழைக்கப்படுவார்கள்! " என்று ஒரு பிரசங்கப் பீடத்தில் எழுதிப் போட்டிருந்தார்கள். பில்தாத்தின் மூன்றாம் உரையில் அரைத்த மாவையே அரைத்ததால் , சின்ன செய்தியாக அவன் பேசினாலும், இன்னொருமுறை அவன் பேச வாய்ப்பில்லை.

ஆறுவசனங்களில் ஆண்டவருடைய வல்லமையையும் நீதியையும் குறிப்பிட்ட அவன், யோபு நிச்சயமாகக் குற்றமுள்ளவனென நியாயந்தீர்க்கிறான்.

யோபுவின் பதில், 26:1-31:40.

ஆறு வசனங்களுள்ள சுருக்கமான பிரசங்கத்திற்கு, ஆறு அதிகாரங்களில் பெருக்கமான பதிலளிக்கிறான் யோபு.

வல்லமை, 26:1-14 .

குற்றஞ்சாட்டின பில்தாத்தைக் கடிந்து கொண்டு, தேவனுடைய வல்லமை ஆகாயத்திலும் (7-9), அவனியிலும் (10-11), ஆழியிலும் (12-13) இருப்பது தனக்குத் தெரியுமென அறிவிக்கிறான் யோபு.

வஞ்சினம், 27:1-23.

"நியாயத்தைத் தள்ளி விடுகிற தேவன், ஆத்துமாவைக் கசப்பாக்கும் ஆண்டவர்" என்று சினந்து, "என் நீதியைக் கெட்டியாய்ப் பிடித்திருக்கிறேன்...என் இருதயம் என்னை நிந்திக்காது" என்று சொல்லி சுயநீதிப் பாராட்டுகிறான் யோபு.

தன்னை எதிர்த்து நிற்கும் பகைஞரையும் சபிக்கிறான்; இருப்பினும் இறைவன் இருக்கிறார் என்றும், அவர் தந்த சுவாசத்தினால் தான், தான் வாழ்வதாகவும் அறிவிக்கிறான்.

"என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்!" என்பது யோபுவின் அறிக்கை; ஆண்டவர் ஏற்கனவே அதை ஆமோதித்திருக்கிறார். 1:8,2:3.

சத்துருவைச் சபியாது, சபிக்கிறவர்களை ஆசீர்வதிக்க வேண்டியது யோபுவும், யாவரும் கடைபிடிக்க வேண்டிய பாடம். மத்.5:38-48; ரோ. 12:17-21.

வரப்பிரசாதம், 28:1-28.

தாங்கள் ஞானவான்கள், தங்களுக்கே எல்லாந் தெரியும் என்று தற்பெருமையோடு தர்க்கம் பண்ணிக் கொண்டிருந்த நண்பர்களுக்கு வானவரின் வரப்பிரசாதமாகிய ஞானத்தின் வசிப்பிடத்தைப் போதிக்கிறான்.

ஞானம் விளைகிற இடம் தெரியாது, அதனை விலைக்கு வாங்க முடியாது. சன்மார்க்கத்தினாலோ, சம்பாத்தியத்தினாலோ, சகலகலா வல்லமையினாலோ, சம்பூரணவயதினாலோ அதைப் பெற முடியாது.

"ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம்!" என்று ஆன்மீக அறிக்கை செய்கிறான். 28:28; சங். 111:10; நீதி. 1:7; 9:10.

வசந்த காலம், 29:1-25.

மூன்று நண்பர்களும் பேசிச்சலித்து மௌனமாகி விட்டனர். எனவே யோபு தொடர்கிறான்.

தன் கடந்தகால வசந்தத்தையும், நிகழ்கால வர்த்தமானத்தையும், வருங்கால வழக்கையும் வர்ணிக்கிறான்.

ஞானத்தை அணிந்து கொண்டு அவன் ஞாலத்தில் வாழ்ந்ததால், முற்காலம் அவனுக்குப் பொற்காலமாகவேயிருந்தது.

தேவனுடைய பாதுகாப்பு (1-2), தேவனுடைய பராமரிப்பு (3), தேவனுடைய பிரசன்னம் (4-5), தேவனுடைய பரிபூரணம் (6), தேவனுடைய பாக்கியம் (11).

மேற்கண்ட ஆசீர்வாதங்களை மேதகு தேவனிடமிருந்து பெற்று வாழ்ந்ததால் ஏழைகளைப் பராமரிக்கவும், ஒடுக்குகிறவர்களை எதிர்த்து நிற்கவும், எளியோரை ஆதரிக்கவும், பரம ஆசீர்வாதங்களைப் பகிர்ந்து வாழ்ந்து வந்த பண்டைய வாழ்வை நன்றியுடன் அறிவிக்கிறான்.

வர்த்தமானம், 30:1-31.

"இப்பொழுதோ..." என்று மும்முறைச் சொல்லி, தற்காலத் தரித்திர நிலைமையைக் குறித்து தாங்கொணாத் தரங்கம் பாடுகிறான். 6,9.16.

மானமும், மதிப்பும் போய், தான் பாட்டும் பழமொழியுமானது மட்டுமின்றி, பாதை தடுமாறி, பயங்கரங்கள் சூழ, பாடுகளின் நாட்கள் பிடித்துக்கொண்டதாகப் புலம்புகிறான். ஆண்டவரின் பாராமுகமும், ஆத்தும வியாகுலமும், ஆபத்துக்களின் அதிகமும் தன்னை அன்றாடம் அரற்ற வைப்பதாக அழுகிறான்.

வருங்காலம், 31:1-40.

இச்சையோ, ஏமாற்றுதலோ, இரண்டகமோ தன்னிடத்தில் இருந்ததில்லையென்றும், தான் அசட்டைபண்ணாத எஜமானாகவும், அந்நியரை ஆதரிக்கிறவனாகவும், ஆராதனையில் உண்மையுள்ளவனாகவும், ஆஸ்தியில் உக்கிராணக்காரனாகவும் இருந்ததாகச் சாட்சி பகர்கிறான். தன் வழக்கைக் கேட்க ஒரு வக்கீல் தேவையென்றும், சர்வ வல்லவர் தனக்குச் சரியான உத்தரவு தரவேண்டுமென்றும் நாடுகிறான்.

எலிகூவின் பாடம், 32:1-37:24.

எலிகூ என்னும் இளம் வாலிபனைக் குறித்து இடையில் பார்க்கிறோம். ராமின் வம்சத்தானான பூசியனாகிய பரகெயேலின் குமாரன் எலிகூ என்று இவன் அறிமுகப்படுத்துகிறான்.

இவன் எப்பொழுது வந்தான், எந்த ஊரான், நால்வரின் நண்பனா, எப்பொழுது இந்த நால்வர் கூட்டத்தில் நுழைந்தான், இதுவரை நடந்த உரையாடல்களைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு வழிப்போக்கனா, யோபு எதிர்பார்த்துக்காத்துக்கொண்டிருந்த மத்தியஸ்தனா... எதுவும் சொல்லப்படவில்லை. அவன் ஆறு அதிகாரச் செய்திகளைப் பேசிய பின்னரும் யோபுவோ, நண்பர்களோ, கர்த்தரோ அவனைப் பற்றிக் குறிப்பிடவில்லை. விலாசத்தோடு அவன் அறிமுகப்படுத்தப்படுவதால் விபரந்தெரிந்த ஒரு வாலிபன் என்று மட்டும் விளங்கிக்கொள்ளலாம்.

யோபுவின் நண்பர்கள் தங்கள்விவாதங்களையும், யோபு தன் விசுவாசத்தையும், வலியுறுத்திக்கொண்டிருந்தபோது எலிகூவோ தேவனுடைய வியாபகத்தை வலியுறுத்தலானான்.

தான் இளைஞனாய் இருந்தபடியினாலும், எல்லோரும் பேசி முடிக்கட்டும் என்று காத்திருந்ததினாலும், இது வரை தான் பொறுமையாயிருந்ததாக அறிவித்து விட்டு, தான் பேசுவதற்குரிய காரணங்களைக் கூறுகிறான். 32:1-22.

கோபம், 1-16.

யோபு தேவனைப் பார்க்கிலும் தன்னைத்தான் நீதிமானாக் கினதினிமித்தமும், கொடுக்கத்தக்க மறுமொழி மூவருக்கும் அகப்படாதிருந்தும், அவர்கள் அவனை ஆகாதவனென்று தீர்த்ததினிமித்தமும் எலிகூ கோபங்கொண்டான்.

கோளாறு, 7-15.

நண்பர்கள் மூவர் பேச்சில் ஞானமில்லை; பிரதியுத்திரம் சொல்லக் கூடாமல் அவர்கள் பேச்சு அற்றுப்போயிற்று; தானுங்காத்திருந்து காலங்கடந்து கொண்டிருந்தது.

கோரிக்கை, 16-22.

தன் அபிப்பிராயத்தைச் சொல்ல தன் உள்ளத்திலுள்ள ஆவி நெருக்கி ஏவியதால் பாரபட்சமின்றி ஆறுதலடையப் பேசவிருப்பதாகக் கூறுகிறான். யோபுவை குற்றவாளியாகத் தீர்க்காமல் தேவனைப் பற்றிய அவனது குறுகிய எண்ணத்தை மாற்றுவதே அவனது பெருநோக்கமாயிருந்தது. தெய்வத்தைப் பற்றிய அவனது தெளிவான கருத்துக்கள் யாவை?

பதிலளிப்பவர், 33:1-33.

தேவன் மனிதனுக்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டவரல்லர், இருப்பினும் அவர் இருவிதமாய் மனிதரோடு பேசுகிறார்.

தரிசனத்தின் மூலமாக, 15-16; தண்டனையின் மூலமாக, 19-22.

மனுஷனுக்கு ஓர் மத்தியஸ்தர் இருப்பாரெனில் மீட்பும், சுகமும், நீதியும்; விடுதலையும் கிடைக்கும் என்று அறிவிக்கிறான்.

அந்த மீட்பர் இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்டதை நாமறிவோம். *1 தீமோ. 2:5.*

பரிசுத்தர், 34:1-35:16.

ஆண்டவர் அநீதியுள்ளவர் என்று அவமதித்தவன் யோபு. *34:5-6; 10-37.* ஆண்டவர் நீதியுள்ளவர் என்பதற்கு மூன்று விவாதங்களை வைக்கிறான் எலிகூ.

முதலாவதாக, அவர் அநீதியுள்ளவரெனில், அவர் தெய்வமல்லர். *34:10-15.*

இரண்டாவதாக, அவர் அநீதியுள்ளவரெனில், நீதியுள்ள அரசாங்கம் இம்மேதினியில் இருக்காது. *16-20.*

மூன்றாவதாக, அவர் அநீதியுள்ளவரெனில், உலகத்தில் நடப்பதை அவர் பார்க்கமாட்டார். *21-30.*

ஆண்டவருடைய நியாயத்தீர்ப்பு அவரது அருங்குணத்தையும், அதிகாரத்தையும் சார்ந்ததென்றும் அறிவிக்கிறான் *8 -9, 13.* யோபு மறுமொழி சொல்லாததால், இன்னும் அவனுக்குச் சிட்சை தேவை என்றான் எலிகூ, *36.*

பராமரிப்பவர், 35:1-16.

மனிதர் செய்யும் நன்மையோ, தீமையோ சக மனிதரைப் பாதிக்குமேயொழிய, சர்வ வல்லவரைப் பாதிக்காது, *1-8.*

வீணான விண்ணப்பங்களுக்கோ, தம்மை மகிமைப்படுத்தாத மன்றாட்டுகளுக்கோ அவர் பதிலளியாது, அவர் தமக்கெதிரான தவறான குற்றச்சாட்டுக்களைப் பொருட்படுத்துவதில்லை, *10-15.*

பெரியவர், 36:1-37:24.

தேவனுடைய மேன்மை அவரது இரக்கமுள்ள இதயத்திலும், இயற்கையின் மேலுள்ள வல்லமையிலும் விளங்கும்.

தெய்வம், வல்லமையுள்ள கரிசனையாளர், *36:1-5;* வருந்துவோருக்கு உரிமைகளை வழங்குகிறவர், *6;* வேதனைகளின் காரணங்களைக் காட்டுகிறவர், *8-9;* வருந்தித் திருந்துவோரை ஆசீர்வதிக்கிறவர், *10-14;* வேதனை வேளைகளில் நம்மோடிருப்பவர், *15;* வாடாத அவரது அன்பு துன்பங்களில் துலங்கும், *16;* விடுதலைக்கும் வளத்திற்கும் துன்பமே தேவ வழி, *16-21;* வல்லமையில் தேவன் உயர்ந்தவர், *22-26;* வருஷங்களை நன்மையால் நிரப்புவார், *27-28;* வேந்தனாய் எல்லா தேசங்களையும் ஆளுபவர், *31;* வான் புவி அனைத்தின் காரிய கர்த்தா. *29-30-37:18;* வெளிச்சமிகுந்தவர், விந்தைமிக்கவர். *37:9-23.*

விவாதத்தின் பிரதானப் பேச்சாளராகிய தேவனுக்கு வரவேற்புரை அளிப்பது போல எலிகூவின் முன்னுரை முடிகிறது. ©

5 விளக்கம்

"பல மாதங்களாக ஒரு காரியத்திற்காக ஜெபித்து வருகிறேன். ஆண்டவர் பதிலே கொடுக்கவில்லை. அமைதியாகவேயிருக்கிறார். என்றைக்குதான் பதில் கொடுப்பாரோ தெரியவில்லை, " என்று ஏங்குபவரில் நீர் ஒருவரா?

ஆண்டவருடைய அமைதியும் ஒரு பதில் தான். அது "இல்லை" யென்றிருக்கும்; அல்லது "பொறு"த்திருக்கச் சொல்லும்.

அமைதி, 1-3.

ஐவர் குரலும் அடங்கிய பின் ஆண்டவர் பதிலளிக்கிறார். தம் மக்களோடு தனித் தன்மை உறவு கொள்ளும் தேவன், "கர்த்தர்" என்னும் உடன்படிக்கைப் பெயரில் வெளிப்படுகிறார்.

நொந்து போன சந்தர்ப்ப சூழ்நிலைகளில், நேசகர்த்தரை நம்பி விசுவாசி தரித்திருக்கிறானா, முற்றிலும் தன்னை அர்ப்பணித்து முழு நம்பிக்கையோடு முன்னவரைச் சார்ந்திருக்கிறானா, வலதுபுறம் இடதுபுறம் சாயாமல் வல்ல தேவனையே நிலைவரமாகப் பற்றிக் கொண்டிருக்கிறானா, கர்த்தருடைய சமுகத்தில் கண்டபடி பேசாமல் கட்டுப்பாடுள்ள வாயோடு வாழ்கிறானா என்பதையெல்லாம் மறைவான விருந்தினராயிருந்து மௌனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தார், மாதேவன்.

தேவனுடைய மௌனம் யோபுவுக்கும், நண்பருக்கும், நமக்கும், நம் சந்ததிக்கும் கர்த்தருக்குக் காத்திருத்தலையும், கழிமிகு பொறுமையையும், கர்த்தரைப்பற்றும் விடாமுயற்சி விசுவாசத்தையும் கற்றுக்கொடுக்கும்.

யோபுவின் கேள்விகளுக்குப் பதிலளியாமல் ஏராளமான கேள்விகளை யோபுவிடமே கேட்கிறார் யேகோவா. நம் கேள்விகளுக்குப் பதில் சொல்ல நல்மீட்பர் கடமைப்பட்டவரல்லர்; தேவ குமாரன் கேள்விக்கே தேவன் பதிலளிக்கவியில்லையே. *மத். 27:46.*

சீனாய் மலையில் அதிரத்தக்கதான இடியோசையோடு அந்நாளில் உரையாற்றிய தேவன், அதே பாணியில் பெருங்காற்றிலிருந்து பிரதியுத்தரங்கொடுக்கிறார். *யாத்.19:16-19.*

அழைப்பு, 38:1-3.

வளவள வென்று பேசிக் கொண்டிருந்த யோபுவைத் தன்னோடு வழக்காட அழைக்கிறார். கர்த்தரிடமே கடைசி வார்த்தையுண்டு என்று காட்டுகிறார்."ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு", என்பதைத் தன் படைப்பு, பராமரிப்பு, பாதுகாப்பு, வழிமுறைகளைக் காட்டி அடக்கி வாசிக்கச் சொல்கிறார்.

அதிகாரம், 38:1-38.

அதிகாரம் உன்னிடத்திலா? என்னிடத்திலா? யாரிடமிருக்கிறது? என்று கேட்டு, தம்முடைய மகிமைக்காக ஒன்றுமில்லாமை யிலிருந்து சிருஷ்டிக்கப்பட்டவைகள் தமக்கடங்கியிருப்பதைக் காட்டுகிறார்.

அருங்கொடை, 38:19-39:30.

"மேதகு தம் கிரியைகளை மேற்பார்வையிடத்தான் உன்னால் முடியுமா?" என வினவுகிறார். ஆழியின் ஆற்றல் *(8-11)*, ஆணைக்குட்பட்ட காலம் *(12)*, அறிவுக்கெட்டா இயற்கை, அருமையாய் நடத்தப்படும் நட்சத்திரங்கள் *(31-33)*, ஆளப்பட வேண்டிய சீதோஷ்ணம் *(34-38)*, அனைத்து விலங்குகளுக்கும் வேண்டிய அன்றாடகப் பராமரிப்பு, பெலன் *(38:19;39:25)*; ஆகியவற்றை யெல்லாம் அறிந்து, ஆண்டவரைத் திருத்தி, அவர் பணியைப் பெருக்க முடியுமா?" என்று கேட்கிறார் *39:19-40:2*.

ஆளுகை, 40:1-41:34.

ஆண்டவருடைய குரலுக்கும், கேள்விக்கும் அஞ்சிய யோபு, மனமுடைந்து அமைதியாகிவிட்டான்.

பெருவெள்ள இரைச்சல் முன் சிறு துளி என்ன செய்யும்?

"உன்னை நீதிகரிக்க என்னை இகழ்வாயோ? கடவுளைப் போன்றவனா நீ?" என்று கேட்டுவிட்டு, தான் படைத்த வல்லமையான பிகெமோத்தையும், லிவியாதானையுங் குறித்து விளக்கி, யோபுவைக் கைகட்டி வாய் பொத்த வைக்கிறார்.

பிகெமோத் காண்டாமிருகத்துக்கும், யானைக்கும் இணையான ஒரு மிருகம். லிவியாதான், முதலைபோலக் காணப்பட்டாலும் அதன் முழுவர்ணணை, தரிசன நூல்களில் வரும் வலுசர்ப்பம் போன்றதாகும். ஏசா. 27 : 1.

கடவுளுடைய அமைதியும், அழைப்பும் அதிகாரமும், அருங்கொடையும், ஆளுகையும் யோபுவை அதிர வைக்கின்றன; மனஸ்தாபத்துக்கும், மனந்திரும்புதலுக்கும் நேராக வழி நடத்துகின்றன. ©

6. விசனம்

ஜாண் வெஸ்லி பக்தியுள்ளவர்; காலை நான்கு மணிக்கு எழும்பி கர்த்தரோடு இருமணி நேரம் உரையாடுவார்; ஒருமணி நேரம் திருமறைத் தியானம் செய்வார்; ஆலயங்கள், ஆஸ்பத்திரிகள், சிறைச்சாலைகள், சிறுமைப்பட்டோர் மத்தியில் அருட்பணிகளென பற்பல பணிகளில் ஈடுபட்டவர்.

லண்டனிலுள்ள அல்டர்ஸ்கேட் தெருவிலுள்ள சிற்றாலயம் ஒன்றிற்குச் சென்று கொண்டிருக்கும்போது, இயேசு கிறிஸ்துவோடுள்ள உறவைக்குறித்த அருட்செய்தியொன்றை ஒருவர் வாசிக்கக்கேட்டார், தன் நற்கிரியைகளையே தான் நம்பி வாழ்ந்துகொண்டிருப்பதாக ஜாண் வெஸ்லி எண்ணினார்.

அன்றிரவு தன் நாட்குறிப்பில் எழுதினார்.

"சுமார் ஒன்பதே முக்கால் மணிக்கு, கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதால், தேவன் இருதயத்தில் செய்யும் மாற்றங்களைக் குறித்து அவர் விளங்கிய போது, என் இருதயம் அனல் கொள்வதாக உணர்ந்தேன். இரட்சிப்பிற்காகக் கிறிஸ்துவில், கிறிஸ்துவில் மட்டுமே, விசுவாசம் வைத்ததாக உணர்ந்தேன். என்னுடைய பாவங்கள் நீக்கப்பட்ட நிச்சயம் பெற்று பாவமரணப் பிரமாணத்திலிருந்து நான் இரட்சிக்கப்பட்டதாக விசுவாசித்துணர்ந்தேன்."

அடக்கம், 42:1-5.

யோபுவும் சன்மார்க்கனே!

இருப்பினும் ஏதோ குறைவுபட்டது போல் தோன்றியது; காதினால் அவரைக் குறித்துக் கேள்விபட்டதோடு சரி, இப்பொழுதோ கண்கள் அவரைக்காண, கனமகிமைப் பிரமாணங்களையும் கேட்டு விட்டான். எனவே தன் அறிவின்மையையும், அருகதையின்மையையும் அடக்கத்தோடு ஒத்துக் கொள்கிறான்.

அறிக்கை, 2-6.

ஆண்டவருடைய சித்தத்தையும், செயலாற்றுதலையும், சத்துவத்தையும், சர்வ வல்லமையையும் ஆணித்தரமாக அறிக்கையிட்டவன், மனத்தாழ்மையோடு தன் மனஸ்தாபத்தையும் அறிக்கையிடுகிறான்.

மனந்திரும்பி மன்றாடுவோருக்கு மங்களகரமான மறுவாழ்வு உண்டு. அடக்கத்திற்கும், அறிக்கைக்கும் ஆசீர்வாதமுண்டே. யேகோவாவின் பிரசன்னத்தில் ஏசாயாவும், சீரேசுவின் சமுகத்தில் சகேயுவும் இப்படித்தான் பாவ அறிக்கை செய்து தேவ ஆசி பெற்றனர். ஏசா. *6:1-8*; லூ. 19:1-10.

மனந்திரும்பிய உங்களுக்கும் மறுவாழ்வு உண்டு! ©

7. விமோசனம்

ஆரம்பத்தில் யோபு சிறப்பாக வாழ்ந்த நாட்களில் அவனை "என்தாசன்" என்று கர்த்தர் அழைத்தார். 1:8.

அதன்பின் வெறுமையாக்கப்பட்ட வேளையிலும் அவனை "என் தாசன்" என்றே அழைத்தார், 2:3.

இறுதியில் சிறுமைப்பட்ட சூழ்நிலையிலும் "என் தாசன்" என்றே புகழ்ந்தார், 42:7,8.

நிறைவிலும், குறைவிலும், பெருமையிலும், வறுமையிலும், தாசனாகவே வாழ்ந்த ஒரு தன்னிகரற்ற தலைவன் யோபு.

சொந்தத்தையும், சொத்தையும், சுகத்தையும், சுதந்திரத்தையும் இழந்தவன், இறுதியில் இறைவனால் ஆசீர்வதிக்கப்படுகிறான்.

வாழ்க்கையின் ஆரம்பத்தைவிட, வாழ்வின் முடிவு முக்கியம்.

யோபு அறியாமையோடு ஆண்டவரை நியாயந்தீர்த்தாலும், ஆண்டவர் யோபுவை நியாயந்தீர்க்கவில்லை; அவனுடைய நண்பர் மூவரோ நியாயந்தீர்க்கப்பட்டனர். யோபுவோ ஆசீர்வதிக்கப் பட்டான்.

அவன் பெற்ற ஆசீர்வாதத்தின் அடிப்படை இரகசியங்கள் யாவை?

மனஸ்தாபம், 1-6.

சோதிக்கப்படுமுன்னர் சொக்கத்தங்கமாக விளங்கிய யோபு, சோதனைச் சூறாவளியில் சிக்கித்தவித்த போது அறிவைப் பறிகொடுத்து *(9:21-24)*, அடக்கத்தை அடக்கம் செய்து *(10:1-3,19:6, 21:4)*, அமைதி நிலை தடுமாறி *(23:6,13,16)*, சர்வவல்லவரைக் குறை கூறினான்; சக நண்பர்களிடம் குமுறினான்.

இருப்பினும், இறைவன் வெளிப்பட்ட போது அவன் இருதயம் அமர்ந்தது; அவரே தேவன் என்று அறிந்து கொண்டு தன்னை அர்பணித்தான். பாவத்தை அறிக்கையிட்டுத் தேவனைப் பற்றிக் கொண்டான், தூளிலும் சாம்பலிலும் இருந்து தன் துணிகரத்தை யெண்ணித் துக்கித்தான்.

மன்றாட்டு, 7-17.

தேவனுக்காக வழக்காடியவர்கள் யோபுவின் நண்பர்கள்; தேவனோடு வழக்காடியவன் யோபு.

இருப்பினும் யோபு நிதானமாகப் பேசினான்; நண்பர்களோ அப்படிப் பேசவில்லையென்று கோபங்கொண்டார் கர்த்தர்.

யோபுவின் இருதயத்தில், "அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்," என்ற அன்பையும், ஆணித்தரமான விசுவாசத்தையும் ஆண்டவர் பார்த்தார். 13:15. நண்பர்கள் இருதயத்திலோ பொய்த்தரிசனத்தையும், புரட்டு

வாயையும், பாரம்பரியப் பெருமையையும், பழுதான கொள்கைகளையும் பார்த்தார்.

நியாயந்தீர்க்க வந்தவர்களுக்காக, நிம்மதியைக் குலைத்தவர்களுக்காக, நிதானத்தை இழந்தவர்களுக்காகப் பலி செலுத்தி வேண்டுதல்செய்ய யோபு பணிக்கப்பட்டான். ஏறக்குறைய சத்துருக்களாக மாறிவிட்ட மித்துருக்களுக்காக மன்றாடினான்.

அன்றாடகப் பலி செலுத்திப் பழகிய யோபு, அன்றைய நாளில் பலி செலுத்திக்கொண்டிருக்கும் போது. தான் பறிகொடுத்த அன்புச் செல்வங்களை ஒருகணம் எண்ணிப்பார்த்திருப்பானோ? இருவழிகளிலும் கண்ணீர் சுரந்திருக்குமோ? 1:4-5.

சிநேகிதருக்காக யோபு விண்ணப்பஞ்செய்தபோது அவனது சிறையிருப்பைக் கர்த்தர் மாற்றினார். அக்கிரமக்காரருக்காக இயேசு வேண்டிக்கொண்டதினிமித்தம் அநேகர் அவருக்குப் பங்காகக் கொடுக்கப்பட்டதுபோல, அநேக பங்குகள் யோபுவுக்கும் கிடைத்தன. ஏசா. 53:12.

மறுதலித்த பேதுருவின் முகத்தைப் பார்த்து மனஸ்தாபப்பட வைத்த ஆண்டவர் (லூ. 22:61), மனஸ்தாபப்பட்ட யோபுவின் முகத்தைப் பார்த்து மனமகிழச்செய்யலானார், 9.

எல்லாவற்றிலும் இரண்டத் தனையான ஆசீர்வாதம், இன ஜன பந்துக்களின் உறவும் பரிசும், ஏழு குமாரரும் மூன்று குமாரத்திகளும், இன்னும் நூற்று நாற்பது வருட உயிர் வாழ்வும், நான்கு தலைமுறை, நெடுநாள் வாழ்வு. பூரண வயது, புகழார்ந்த முடிவு ... இவையெல்லாம் காரணமறியாது பாடுபட்ட ஒரு கபடற்ற விசுவாசியின் பூரண ஆசீர்வாதங்கள்.

எல்லாவற்றிலும் இரண்டத்தனை ஆசீர்வாதங்கள் பெற்ற யோபு, பிள்ளைகள் விஷயத்தில் இரண்டத்தனை பெறவில்லையே? செத்துப்போன பத்துப்பேர் போலத் தானே இன்னொரு பத்துப் பேரைப் பெற்றிருக்கிறான்? இருபது பேரைப் பெற்றிருக்கலாமே! அப்பொழுது தானே இரட்டிப்பான ஆசீர்வாதத்தின் கணக்குச் சரியாகும்?

கணக்கு சரிதான், கணிப்புதான் தவறு.

இறந்த பத்துப்பிள்ளைகளும் இறைவன் மடியில் தானே உயிரோடிருக்கின்றனர்? கொடுத்த கர்த்தர் தானே எடுத்துக் கொண்டார்? உன்னதத்தில் பத்துப் பிள்ளைகள்; உலகத்திலே பத்துப் பிள்ளைகள்! மொத்தம் ஜீவனோடிருக்கும் இருபது பிள்ளைகள்; கணக்குச் சரிதானே ?

யோபு -
துன்பக் கடலைத் தாண்டி விட்டான்!
தோணியாயிருந்தது தூய விசுவாசம்!! ©

8. வியாக்கியானம்

பிரபல ஓவியர் ஒருவர் புயலைப்பற்றி ஒரு சித்திரம்வரைய விரும்பினார். பற்பலவிதமான படங்களைத் தீட்டிய பின்னரும் புயலைப்பற்றிய துல்லியமான ஓர் ஓவியம் தீட்டிவிட்டதாக அவருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அடிக்கடிப்புயல் வீசும் ஓர் ஆழிப்பகுதியைக் குறித்துக் கேள்விப்பட்டு நண்பர் சிலரை அழைத்துக்கொண்டு அந்த நடுக்கடலுக்குள் சென்றார்.

பாய்மரப் படகொன்றின் மையத்தில் கயிறுகளால் தன்னைத் தப்பவிடாது இறுகக்கட்டச்சொல்லி, புயல் வீசும் அந்தக் கடற்பகுதியில் விட்டுவிடச் சொன்னார் ஓவியர். பரபரப்போடும் பயத்தோடும் பணிந்து ஓவியரை ஒழுங்காகக் கட்டிவைத்து, நங்கூரம் பாய்ச்சிவிட்டு நகர்ந்துவிட்டனர் நண்பர்கள்.

கடும்புயல் தாக்கியது; அலைகடலில் துரும்பாக ஆடியது படகு. நிலைகுலைந்த ஓவியர் நிர்க்கதியானார். "ஏன்தான் இப்படிப்பட்ட விபரீத விளையாட்டில் ஈடுபட்டேனோ?" என்று சிந்திக்கக்கூட அவகாசமின்றி சீறிப்பாய்ந்தன அலைகள்; சிதறின பாய்மரங்கள்; "செத்தேன்! " என்று கத்தினார் சித்திரக்காரர்.

ஆழி அமர்ந்தது; அருமையான ஓவியம் பிறந்தது!

"யோபுவைப்பற்றி வியாக்கியானம் எழுத அறிவும் ஆராய்ச்சியும் இருந்தால் போதாது; அருகதை தேவை; அவன் கடந்து சென்ற அனுபவம் தேவை!

அவன் சொத்தையும், சொந்தத்தையும், சுகத்தையும் சுதந்திரத்தையும் இழந்து ஜீவனைக் கையில் பிடித்துக்கொண்டு போராடியவன்; அப்படிப்பட்டவனுடைய சரித்திரத்திற்கு விளக்கவுரை யெழுதுவதுதற்குச் சற்றேனும் தகுதி வேண்டாமா? என்று யாராகிலும் என்னிடத்தில் கேட்டால், எனக்கு அந்தத்தகுதி எதுவும் இல்லையென்றே செல்வேன்.

அனுபவம்

இருப்பினும், சொத்து - சொந்தம் - சுகம் - சுதந்திரம் இழப்பில் சிறுதுளி பருகிய அனுபவம் எனக்கு உண்டு. உற்றார், உறவினர், ஊழியர் உறுத்துதல்களுக்கு ஆளாகியிருக்கிறேன்; சுற்றம், சபையார் மற்றும் பலருடைய சீற்றங்களைச் சந்தித்திருக்கிறேன்; பிரபலமான தேவதாசர்களைக் குறை கூறியே பத்திரிகை நடத்தும் சாபக்காரர்களுக்கும் தப்பவில்லை.

நித்தம் நித்தம் யுத்தங்களைக்கண்டு எதிர்நீச்சல் போட்டு வாழ்ந்து வரும் எத்தனையோ சாட்சிகளின் மத்தியில் நானும் ஒருவன்.

"தம்பி, கரும்பு பிழியப்படாமல் சாறு வராது. கர்த்தருடைய ஊழியத்தில் உங்களை அர்ப்பணித்து, பிழியப்பட ஒப்புக்

கொடுப்பீர்களாகில் உங்களிடமிருந்து சுவிசேஷ சத்தியத்தின் சாறு உலகமெங்கும் பயனளிக்கும்!" என்று என் மூத்த போதகர் என் அருட்பணியின் ஆரம்பநாட்களில் அறிவித்தார்; ஆமென்!

"அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்" என்ற அருள்மிகு விசுவாச அறிக்கையின் அடிப்படையில் அனுதினமும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்; அருட்பணியாற்றிக் கொண்டிருக்கிறேன்.

அஞ்ஞானம்

யோபு, பாடுகளின் புத்தகம் என்று சொல்வதைவிட ஆண்டவருடைய ஆளுகையையும், அதிகாரத்தையும், அடைக்கலத்தையும், அன்பையும் அறிவிக்கும் இறையியல் நூல் எனலாம்; திருமறை முழுவதையும் குறுகத்தரித்த குறுநூல் என்று யோபுவை அழைக்கலாம். திருச்சபைகளில் பரவிவரும் தவறான கொள்கைகளுக்குச் சரியான விடையளிக்கும் சாரளவொளியாய் விளங்குகிறது, இந்தச் சரித்திர நூல்.

சஞ்சலத்தைப் பற்றிய கொள்கைகள்!
"துன்பங்கள் ஏன்? அவற்றின் இருப்பிடம் யாது? நீதிமான் துன்பப்படலாமா? அறியாமக்களின் பரிதாப மரணம் ஏன்? ..." போன்ற கேள்விகள் அநேகரைக் குழப்புகின்றன.

பாவமே காரணம் என்று சொல்லி, பரிசுத்தம் நாடி ஜீவிக்கிறவர்களைக் கலக்கி அவர்களுடைய விசுவாசத்தை அலைக்கழிக்கின்றனர் பலர்.

பாடுகளுக்கு ஒரு காரணம், பாவம்; ஒரே காரணமல்ல! நான்கு நற்சான்றிதழ்களை யோபுவுக்கு வழங்கிய நாதர் அவன் "முகாந்திரமின்றி"ப்பாடு படுவதைக் குறித்தாரே. 1:8; 2:3.

பிறவிக்குருடனும், பிலாத்துவால் கொல்லப்பட்டவர்களும், கோபுரமிடிந்து இறந்தவர்களும், கொலைசெய்யப்பட்ட யோவானும், ஸ்தேவானும் பாவத்தால் பாடுபட்டனர் என்று வேதஞ்சொல்லவில்லையே. யோவா. 9:1-3; லூக். 13:1-5; மத். 14:10; அப். 7:58.

பாடுகளுக்குப் பாவந்தான் காரணமாயிருக்குமோ என்று கற்பனை பண்ணிக்கொண்டிருப்பதும், கர்த்தருடைய விசுவாசிகளைக் கலங்கடித்து நியாயந்தீர்ப்பதும், பாவம்!

சாத்தானைப் பற்றிய கொள்கைகள் !
"சத்துரு போராட்டம்தான் உங்கள் சஞ்சலங்களுக்குக்காரணம். பலவானை முந்திக் கட்டவேண்டும், அவன் பிடுங்கியதை நாம் அவனிடமிருந்து பிடுங்கவேண்டும்; மூன்று வெள்ளிக்கிழமைகள் உபவாசமிருந்து வருவேன்; உங்கள் வீட்டில் மறைத்துவைக்கப்

பட்டிருக்கும் தகடுகளையும், தாயத்துக்களையும் எடுப்பேன்; உபவாசத்திலிருங்கள்," என்று சொல்லி ஒழுங்காக வந்து உங்களைக் காணிக்கையென்ற பெயரில் கொள்ளையடித்துச் செல்லும் யந்நேக்கும், யம்பிரேக்கும் எச்சரிக்கையாயிருங்கள். *2 தீமோ. 3:1-8.*

இயேசுவின் மேல் கவனம் வைப்பதற்குப்பதிலாக, "பிசாசு, பிசாசு..." என்று சொல்லி பிசாசின் மேல் கவனம் வைக்கவே தூண்டுகிறார்கள். இந்தத் தூண்டில்கள். அரைகுறை வசனங்களைச் சொல்லி, பாலைக்கறக்காமல், மடுவையே அறுக்கும் மாயவித்தைக் காரர்கள் இவர்கள்.

சாபங்களைப் பற்றிய **கொள்கைகள்!**

"சாபமுள்ள வீடு இது; உள்ளே நுழையவே என்னால் முடியவில்லை!" என்று பயங்காட்டும் பயங்கரவாதிகளும், "பாரம்பரியச் சாபக்கட்டுகள் உங்கள் வீட்டிலிருக்கிறது. பலர் உங்களை நோக்கிச் சாபங்களை ஏவிக்கொண்டிருக்கிறார்கள்; அதை முறியடிக்கத்தான் வந்தேன்," என்று சொல்லி, அந்தவீட்டின் கஜானா காலியாகும்வரைக் கஜினிபோல் படையெடுக்கும் கள்ளத்தீர்கதரிசிகள் உண்டு.

சாபங்களை முறியடிக்க ஒரே வழிதான் உண்டு. கிறிஸ்துவுக்குள் இருந்தால் நீர் ஒரு புதுச்சிருஷ்டி, பழையவைகள் (பாவம், சாபம், தோஷம் எல்லாம்) ஒழியும், எல்லாம் புதிதாகும் 2 கொரி. 5:17.

சுகத்தைப்பற்றிய கொள்கைகள்!

"இயேசுவை ஏற்றுக்கொள்; எல்லாக்கஷ்டமும் தீரும். பிரச்சனைகள் நீங்கும்; பிணிகள் மறையும்! எவ்வளவோ என்பதும் பழுதான போதனைதான். இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்ட பின்னரும் புதுப்பிரச்சனைகள் வரலாம்.

பிரச்சனைகளற்ற வாழ்வைக்குறித்து வேதம் போதிக்கவில்லை; பிரசன்னத்தின் வாழ்வைக் குறித்தே திருமறை போதிக்கிறது. *சங். 23:4.*

விசுவாசிகள் நம்பிக்கையோடு பாடுபடுகிறார்கள்; அவிசுவாசிகள் நம்பிக்கையின்றிப் பாடுபடுகிறார்கள். நமக்கு முடிவில்லா நம்பிக்கை; அவர்களுக்கு நம்பிக்கையில்லா முடிவு; அவ்வளவுதான்!

சபிக்கப்பட்ட உலகத்தில் வாழ்வதாலும், சாத்தானாலும், பாவத்தின் விளைவுகளாகவும், பிணிகள் வரலாம். இயேசுவை ஏற்றுக் கொண்டவருக்குப் பாவமன்னிப்பு உண்டு; பரலோகத்தின் நிச்சயமுண்டு; ஆனால் பாவத்தின் பின்விளைவுகள் தொடரலாம்.

"ஆண்டவர் அற்புதர், அதிசயமானவர்; உங்கள் வியாதிகள் நீக்கி அற்புதங்களைப் பெற எங்களிடத்தில் வாருங்கள்!" என அறைகூவல்விடுக்கும் ஆட்கள் உண்டு. ஆண்டவர் அற்புதங்களைச் செய்வது உண்மை; அவர் அதிசயங்களைச் செய்யமுடிவதும் உண்மை; ஆனால் எப்பொழுதும் அவர் அற்புதங்கள் செய்வதில்லையே.

இம்மானுவேல் ஒரு கன்னியிடத்தில் பிறந்தது ஓர் அற்புதம்; ஆனால் அந்த இம்மானுவேலையும், மரியாளையும், யோசேப்பையும் ஏரோதுவின் கைகளினின்று காப்பாற்றச் சித்தங்கொள்ளாமல், "எகிப்துக்கு ஓடிப்போ"! என்றல்லவா சொல்லிவிட்டார்? மத். 2:13

பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட ஸ்தேவான் அற்புதங்களையும் அடையாளங்களையுஞ்செய்தான். அப். 6:8.

பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட யோவான் ஒரு அற்புதத்தையுஞ் செய்யவில்லையே. லூக். 1:5; யோவா. 10:4.

உடனடியான அற்புத சுகத்தையும், படிப்படியான சுகத்தையும் (பிலி.2:25-27), மருத்துவ முறைச் சுகத்தையும் (கொலோ. 4:14; ஏசா. 1:8; 2 இரா. 20:7), மறுமையிலே பெறும் சுகத்தையும் மறைநூல் அறிவிக்கிறது. 2 தீமோ. 4:20. சுகம்பெறுவதும், பெறாததும் தேவ சித்தம்; தேவை சந்திக்கப் படுவது முக்கியமல்ல; தேவ சித்தம் நம் வாழ்வில் நிறைவேற நம்மை ஒப்புக்கொடுப்பதே முக்கியம்.

செழுமையைப்பற்றிய கொள்கைகள் !

கிறிஸ்துவின் சிலுவைக்கும், தேவனுடைய சித்தத்திற்கும் எதிரான இன்னோரு போதனை செழுமைக் கொள்கை. "இவ்வளவு பணம் எங்களுக்கு அனுப்பினால் உங்களுக்கு எவ்வளவோ பணம் குவியும், பொருட்கள் நிறையும்; சொத்துக்கள் சேரும்; சுகபோகமாக ஜீவிக்கலாம்!" என்ற சூதாட்டக் கொள்கை.

எளிமையைப்போதித்து ஏழ்மையில் வாழ்ந்த ஆண்டவர், "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது" என்றார். மத். 5:3; லூக். 6:20.

வாசல்வழியாய்ப் பிரவேசியாமல், வேறு வழியாய்ப் பிரவேசித்த ஓநாய்களே, இடுக்கமான வாசலை மறைத்து, அகலமான வாசலைத்திறந்து வைத்து, மாம்சீக வாழ்க்கைக்குச் (Materialism) "செழுமை" (Prosperity) என்ற மறுபேர் கொடுத்து, தேவராஜ்யம் கட்டுவதற்குப்பதிலாகத் தங்களைச் சுற்றிலும் குட்டிராஜ்யங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். மத். 7:13-23; யோவா. 10:1,12.

சீஷத்துவத்தின் அடிப்படை இரகசியம் சிலுவை; செழுமையல்ல (மத். 16:24)! படோடாப வாழ்வு உங்களுக்கு அளிக்கப் படவில்லை; பாடுபடுவதற்கு உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. பிலி. 1:29; 2 தீமோ. 3:12.

ஒருசில ஆசீர்வாத அடிப்படை, நிரூபண வசனங்களை (proof texts) வைத்துக் கொண்டு, வஞ்சித்து, வேட்டையாடும் வேடர்களுடைய கண்ணிகளுக்கு விசுவாசிகள் தப்பி வாழவேண்டும். முழு வேதாகமத்தையும் முறைப்படிப் படித்துத் தியானியுங்கள்; யோபுவுக்கே அது அனுதின ஆகாரமாகயிருந்ததே 23:12; சங். 119:98-100,11.

ஆதிமூலம்

பாடுகளுக்கெல்லாம் பாவமே காரணம் என்பது தவறு என்பது தான் யோபுவின் பாடுகளின்று கற்றுக்கொள்ளுங்காரியம். பாடுகளுக்கு நான்கு முக்கியமான காரணங்களுண்டு.

சுயம்

ஆதிப்பாவம் சுயமே! ஆதாம் ஏவாள் ஆண்டவரைப் போலாகவேண்டுமென்ற சுயமே அவர்களைத் தேவசமுகத்தை விட்டுத்துரத்தி அரும்பாடுபடவைத்தது. ஆதி. 3:5.

யோபுவின் பாடுகளுக்குச் சுயம் காரணமல்ல; தேவனுக்கும் சாத்தானுக்குமிடையே நடந்த சவாலின் விளைவே யோபுவின் பாடுகளுக்குக் காரணம். "முகாந்திரமின்றிப் பாடுபட்டவன்" அவன் என்று முழு முதல் நாயகரே சொல்லிவிட்டார். 2:3;1:1,8.

யோபு பாவமில்லாதவனல்லன். பாவ உலகில் பாவத்தன் மையோடு பிறந்த அவனும் ஒருபாவியே. ஆனால் அவனது நண்பர்கள் குற்றஞ்சாட்டியது போல், அவன் பட்ட கஷ்டங்களுக்கு அவன் பண்ணிய பாவங்களே காரணம் என்பது பிழை.

தன்பாவத்தன்மையினால் யோபுவிடமும் சுயம் இருந்தது; தன் அனாவசியமான பாடுகளினால் அவ்வப்போது அவனது சுயமும் சீறியது. "நான் ... என் ... எனக்கு ... என்னை ... " என்று ஏராளமுறை உச்சரிக்கும் யோபு, 29-ஆம் அதிகாரத்தில் மட்டும் 40 முறை உச்சரிக்கிறான். இருப்பினும் யோபுவின் பாடுகளுக்குச் சுயம் காரணமல்ல.

சமூகம்

சபேயரும், கல்தேயரும் யோபுவைக் கொள்ளையடித்தனர்; சபிக்கச் சொன்ன மனைவி இடறலாயிருந்தாள்; சதா குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்த சிநேகிதர் சரீரத்தில் முள்ளாக இருந்தனர்; சுற்றமும் சமூகமம், வாலிபரும், பிள்ளைகளும், வேலைக்காரர்களுங்கூட வேடிக்கைபார்த்துக்கொண்டு நின்றனர்.

அடுத்தவர்களால் விசுவாசிகளுக்குப் பாடுகளுண்டு. தீர்க்கதரிசிகள் துன்புறுத்தப் பட்டார்கள்; அப்போஸ்தலர்கள் அவமதிக்கப் பட்டார்கள்; சீஷர்கள் சிறைகளில் தள்ளப்பட்டார்கள்; கிறிஸ்தவர்கள் சாட்சிப் பொருளாக்கப்பட்டார்கள். எபி. 11:35-40.

சாத்தான்

அலகையே பாடுகளுக்கு ஆதிமூலம்! சத்துருவாகிய பிசாசு தேவனிடம் உத்தரவுபெற்றுக் கொண்டு யோபுவை உச்சி முதல் உள்ளாங்கால்வரை வாதித்தான்.

இப்பிரபஞ்சத்தின் அதிபதியால் போராட்டங்களுண்டு; அந்தகார லோகாதிபதியால் அல்லல்கள் உண்டு, பிசாசு தனக்குக் கொஞ்சகாலம் மாத்திரம் உண்டென்றறிந்து. (யோவா. 16:11;

எபே. 2:2; 2 கொரி. 4:4; கொலொ. 1:13). கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை வழுங்கலாமோவென்று வகைதேடிச்சுற்றித்திரிகிறான். 1 பே. 5:8. எதிராளியாகிய அவன் ஏமாற்றகிறவன்; ஏவிவிடுகிறவன்; எதற்குந் துணிந்தவன்; இறுதியில் எரிநகரத்திற்குப் பாத்திரன்.

சர்வ வல்லவர்

சாத்தானையும் அவன் சவாலையும் பற்றி அறியாத யோபு சர்வ வல்லவருடைய அம்புகளே தன் சஞ்சலத்திற்குக் காரணம் என அங்களாய்த்தான். *6:4;16:4;19:11,12;30:20-22.*

அது அவனது அறியாமை.

சாத்தான் தேவனிடம் தம் கையை நீட்டி யோபுவை இருமுறைத் தொடச் சொல்லியும் சாத்தானின் கையிலேயே யோபுவை விட்டு விட்டார் சர்வ வல்லவர். *1:1-12;2:5-6.*

ஆனால், "முகாந்திரமில்லாமல் அவனை நிர்மூலமாக்கும்படி நீ என்னை ஏவின போதிலும்..." என்று கர்த்தர் சொல்லும் போது, பக்தனின் பாடுகளில் கர்த்தருக்குப் பங்குண்டு என அறியலாம்; பாடுகளுக்கும் தேவனுக்கும் சம்பந்தமில்லையென்று சொல்ல முடியாது. ஆண்டவர் பேதுருவைச் சுளகிலே போட்டுப் புடைப்பது போல பாடுபடுத்த, சாத்தானுக்கு அனுமதி கொடுத்தார். லூ. 22:31.

ஆண்டவர் பாடுகளை அனுப்புகிறாரா என்பது ஆராய வேண்டிய கேள்வி.

- சிட்சையும், சிலுவையும் தேவனுடைய சித்தம். எபி. 12:10; மத். *16:24.* ஆவியின் கனியோ நீடிய துன்பம். கலா. 5:22.
- நுகத்தைச் சுமப்பது வாலிபனுக்கு ஏற்றது; அவரே அதனை அவன்மேல் வைதார். புல. *3:27-29.*
- சுவிசேஷத்திற்காகத் தீங்கனுபவிக்கவேண்டும். 2 தீமோ. *1:8.*
- அல்லல் நிறைந்த அருப்பணிக்கு அனுப்பிவைக்கப்பட்டவன் எசேக்கியேல் *2:1-10.*
- ஓநாய்களுக்குள்ளே ஆடுகளை அனுப்பிவைப்பவர் இயேசு.

"... கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. பிலி. *1:29.*

அவசியம்

அப்படியானால் அருளப்பட்ட பாடுகளினால் பயன்கள் யாவை?

பிரசன்னம், 40:3 42:1-6.

யோபுவின் கேள்விகளுக்குத் தேவன் விடையளிக்கவில்லை; தம்மை வெளிப்படுத்தி அவன் துயரத்தை நீக்குகிறார்

சூளை ஏழு மடங்கு சூடாக்கப்பட்டாலும் தேவகுமாரன் பிரசன்னம் கூடவேயிருக்கும். தானி. *3:19-26.*

புயலிலும் தேவனுடைய பிரசன்னமுண்டு. 38:1;மத். 14:24-27; நாகூம் 1:3.

பரீட்சை, 23:10.
சோதிக்கப்பட்டபின் சுத்தப்பொன்னாக விளங்குகிறான் யோபு. விசுவாசத்தில் பரீட்சையுண்டு! ஆபிரகாமும் அப்போஸ்தலனாகிய பவுலும் பரீட்சைக்கு நின்றவர்கள்; வென்றவர்கள். ஆதி. 22:1; 2 கொரி. 13:5-6.

அழிந்துபோகிற பொன் அக்கினினால் சோதிக்கப்படுகிறது; அதைப்பார்க்கிலும் விலை யேறப்பெற்ற விசுவாசம் அரும் பாடுகளால் சோதிக்கப்படுகிறது. 1 பே. 1:7; எபி. 12:10.

பணிவு, 40:4-5;42:1-6.
துணிவோடும். துணிகரத்தோடும் தேவசமுகத்தில் பேசத் தலையெடுத்த யோபுவுக்குப் பணிவைக்கற்றுக் கொடுக்கிறார் பரமபிதா. அலப்பிக் கொண்டிருந்த அவன் தன்னை அருவருத்து, தூளிலும். சாம்பலிலுமிருந்து மனஸ்தாபப்படலானான்.

பொறுமை, 42:7-8.
சொத்தையும், சொந்தத்தையும், சுகத்தையும், சுதந்திரத்தையும் இழந்த யோபு அவற்றையெண்ணிக் கத்திக்கொண்டிருக்கவில்லை. தேவனுடைய மௌனமே அவனைக் கோபப்பட வைத்தது; நண்பர்களை மன்னித்து, நாதருக்குக் கீழ்ப்படிந்து அவர்களுக்காகப் பலி செலுத்தினான்.

யோபுவின் பொறுமையென்பது அவன் விசுவாசத்தில் வழுவாது விடாமுயற்சியுடன் தேவனைப்பற்றிக்கொண்டிருந்ததேயாகும். 13:15; யாக். 5:7-11; 1 தெச. 1:6-7; 2 தெச. 1:4-7.

பாடம், 42:1-6.
காதுகளால் தேவனைக்குறித்துக் கேள்விப்பட்டு கண்களால் பார்த்துவிட்டு, தேவனைப்பற்றிய வெளிப்பாட்டைப் பெற்று விட்டான். அவன் கற்ற பாடங்கள் நமக்குப்பயனளிக்கின்றன.

"நான் உபத்திரவப்பட்டது நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன்" சங். 119:71. பிதா சிட்சித்துப் போதிக்கும் ஆசிரியர். உபா.8:5; 11:2; எபி.12:6-11.

தேவன் இருளில் கற்றுக் கொடுத்த பாடங்களை வெளிச்சத்தில் மறந்து போகலாகாது.

கற்ற பாடங்களை மற்றவர்களிடம் பகிர்ந்து கொண்டு ஆறுதலின் ஆலோசகர்களாக வாழ்வது எத்தனை ஆசீர்வாதம்?. 2 கொரி. 1:4.

பலன்
இழந்த எல்லாவற்றையும் இரட்டிப்பாகப் பெற்றான் யோபு; இறை வணக்கமும், வழிபாடும் விசுவாசமும் இன்னும் அவனில் அதிகரித்தது. 42:7-17.

பங்காளி

பாடுபட்ட, பாடுபடும் மேகம் போன்ற திரளான சாட்சிகளின் மத்தியில் யோபு; பாட்டாளிகளின் பங்காளன்; பாடுகளின் ஐக்கியத்தை வாஞ்சித்து வாழ்ந்த பவுலுக்கு அவன் ஓர் எடுத்துக்காட்டு. பிலி. 3:10.

"கிறிஸ்துவின் மகிமைவெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்" 1 பே. 4:13.

ஆண்டவருடைய நோக்கம் :

வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் தேவன் தமது திட்டத்தை வைத்திருக்கிறார். 23:10-14.

தாம் திட்டமிட்டதைத் தெய்வம் நிறைவேற்றுவார். எபே. 3:9-11.

நம்முடைய மகிழ்ச்சியைவிட நாதருடைய மகிமை முக்கியம் என்று வாழ்வோமெனில் நமக்கும் மகிழ்ச்சியும் மனநிறைவுமேற்படும். பிலி. 1:20.

நம்முடைய சந்தோஷமோ சாதனையோ அன்றி, தேவசித்தத்திலும், தேவசாயலிலும் நாம்வளர்ந்து, தம்முடைய குமாரனுடைய சாயலுக்கேற்ப நாம் மாற்றப்படுவதே தெய்வத்தின் நோக்கம்.

பாடுகளைத்தவிர்த்து வாழ்வது நன்றாக இருக்கலாம். ஆனால் பாடுகளிலுள்ள தேவநோக்கத்தைப் புரிந்துகொள்ளாமல், படித்துக் கொள்ளாமல் அவற்றைப் புறக்கணிப்பதையே குறிக்கோளாகக் கொண்டால், பாடுகளில் ஆண்டவர் புதைத்துவைத்திருக்கும் ஆவிக்குரிய பொக்கிஷங்களை இழந்து போவோம். மண்பாண்டங்கள் துளைக்கப்பட்டால்தானே கிறிஸ்துவின் மகிமையின் ஒளியின் பிரகாசம் மற்வர்களுக்குத் தெரியும்? 2 கொரி. 4:4-12.

பல்லைக்கடித்துக்கொண்டு பாடுகளைச்சகித்து வாழப் பிரயாசப்படுவோமெனில், பாடுகள் நம்மேல் பயங்கர எஜமான்களாக மாறிவிடுகின்றன.

பாடுகளை ஏற்றுக் கொண்டு "ஏன்" என்ற கேள்வி கேளாமல் "என்ன?" என்ற கேள்விகேட்டு வாழ்வோமெனில் தேவச்சித்தம் துலங்கும்; தேவமகிமை விளங்கும். பாடுகள் நமக்கு அடிமைகளாகி விடுகின்றன.

கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காகச் சிறையில் தள்ளப்பட்ட ஒரு போதகர், "இந்தச் சிறைச்சாலை சிற்றாலயமாக மாறப்போகிறது!" என்றார்.

தமஸ்குச் சாலையில் வீழ்ந்து, குருடாகி, கைலாகு கொடுத்து வழிநடத்தப்பட்ட அவமானமான சூழ்நிலையில், "என்ன செய்யச்

சித்தமாயிருக்கிறீர்?" என்று பவுல் கேட்டுத் தேவசித்தமறிந்து. பின்னர் பவுலாகத் தேவனுக்காகப் பரிமளித்து வாழ்ந்தது, வளரும் விசுவாசிகளுக்கு ஓர் அழகான எடுத்துக்காட்டு. அப். 9:6-16.

அருட்பிரசன்னம்

பாடுகளைத் தேவன் தம் வாசனங்களாகப் பயன்படுத்தினாலும், நம்மைவிட்டு விலகாமலும், நம்மைக் கைவிடாமலும் நாடோறும் நம்மோடிருக்கிறார். எபி. 13:5.

புல்லுள்ள இடங்களிலும், அமர்ந்த தண்ணீர்களண்டையிலும் "அவர்" எனத் தூரத்தில் காணப்படும் ஆண்டவர், பள்ளத் தாக்கிலும் பொல்லாப்பிலும் "நீர்" எனப்பக்கத்தில் வந்து விடுகிறார். சங். 23.

யோபு தான் தேவனைக்காணமுடியாமல் தனித்துவிடப் பட்டதாக உணர்ந்தான். 23:8-10.

ஆனால், திரித்துவத் தேவனும், தேவ தூதர்களும். திரளான சாட்சிகளும், பணிவிடை ஆவிகளும், பராமரிப்புத் தூதர்களும், பரிசுத்த வான்களும் நம்மைச் சூழ்ந்திருப்பது நமக்குத் தெரியுமே! எபி. 12:1;1:14; மத். 18:10.

இமைப்பொழுது மறந்து, இணையற்ற கிருபையோடு சூழ்ந்து கொள்பவர் இறைவன். ஏசா. 54:7.

இந்த உலகப்பாடுகள் கொஞ்சக்காலந்தானே?

"...அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது." 2 கொரி. 4:17.

மேற்கண்ட கர்த்தருடைய வார்த்தையில் மேன்மையான சில வித்தியாசங்களைப் பாருங்கள்.

- உபத்திரவம் - உன்னத மகிமை!
- இலேசான உபத்திரவம் - அதிகமான நித்திய கன மகிமை!
- அதிசீக்கிரம் நீங்கும் உபத்திரவம் - நித்திய மகிமை!

இக்காலத்துப் பாடுகள் இனிவரும் மகிமைக்கு ஒப்பானவையல்ல. ஆகவே, ஆண்டவருக்காகப் பாடுபடுவது ஆசீர்வாதமான பாக்கியங்கள். ரோ. 8:18.

பூமியிலே போராட குறிக்கப்பட்ட காலமே உண்டென்பது யோபுவுக்குத் தெரிந்திருந்த கருத்து. 7:1.

சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோவுக்குச் சிலமணி நேரச் சூளை; சிங்கக் குகையில் தானியேலுக்கு ஓரிரவுத் தனிமை; எரேமியாவுக்குப் பாழுங்கிணற்றில் ஒருசில நாட் தவிப்பு; "பத்து" நாட்கள் உபத்திரவப்படுவீர்கள்; பரலோகத்திலோ நித்திய மகிமையைப் பெறுவீர்கள். வெளி. 2:10.

எத்தனை காலம் உபத்திரவப்பட்டான் யோபு?
திருமறையில் அதைப்பற்றிய குறிப்பில்லை.

ஒரு கற்பனைக் கணக்கு:
"ஒருநாள்"சொத்தையும் சொந்தத்தையுமிழந்தான். 1:13; "பின்னொரு நாள்" சுகத்தையும் சுதந்திரத்தையுமிழந்தான். 2:1. அந்த "ஒரு நாளு"க்கும் "பின்னொரு நாளு"க்கும் இடைப்பட்ட நாட்கள் எத்தனை? தெரியாது.

அடுத்தடுத்த நாட்களாயிருக்கலாம்; அல்லது ஒரு சில நாட்களாகியிருக்கலாம்.

யோபுவின் துக்கச் செய்தியைக் கேள்விப்பட்டனர் நண்பர்கள். 2:11. ஒருசில நாட்களிலேயே கேள்விப்பட்டு, ஒருசில நாட்களுக்குள் அவனிடம் வந்து சேர்ந்திருப்பர்.

ஏழு நாட்கள் அமைதி!

ஒரே நாளில் நண்பர்களுடைய உரையாடல்களும் நாதருடைய வெளிப்பாடும் நடந்திருக்க வாய்ப்புண்டு; அதே நாளில் அர்ப்பண மும், அஞ்சலியும், ஆசீர்வாதமும் நிகழ்ந்திருக்கலாம்.

மேற்கண்ட கணக்கு ஊகமேயொழிய, உறுதியாக நிரூபிக்கப்படக் கூடிய உண்மையல்ல. இருப்பினும் யோபுவின் துன்பம் அதிசீக்கிரத்தில் நீங்கிய கொஞ்சக்காலக் குறிக்கப்பட்ட நாட்களே என்பது எனது கருத்து. 7:1.

ஆனால் அவனது மகிமை ஊத்ஸிலும், ஓமானிலும், உலகெங்கும் மணம் வீசுகிறது.

ஆசீர்வாதம்

உபத்திரவத்தின் நாட்களிலும் எல்லாவற்றையும் இழந்து விடவில்லை யோபு. நாதர், நண்பர், நாயகி, நம்பிக்கை அவனுக்கு இருந்தது. எதிர்காலத்தைப்பற்றி அவ்வப்போது குழம்பினாலும், கல்லறை கடந்த வாழ்வைக்குறித்தும், கடைசியில் மீட்பரைத் தரிசிப்பதைக் குறித்தும் அவனுக்கு விசுவாசமுண்டு.14:14;19:25-27. கேள்விகளுக்கு விடைகள் கிடைக்காவிடினும், கர்த்தருடைய வெளிப்பாடும் வார்த்தைகளும் அவனுக்குக் கிடைத்தன.

யோபு தன்னிலை உணரும்வரை தரித்திருந்த தேவன், தன்னை அவன் உணர்ந்ததும், தம்மை வெளிப்படுத்தி அவனை ஆசீர்வதித்தார்; இழந்ததையெல்லாம் இரட்டிப்பாக அவன் பெற்றுக் கொண்டான்.

"பிரச்சனைகள் தீராவிடினும் பிதாவைப் பணிந்து கொள்வேன்" என்பது யோபுவின் பிரமாணம். *13:15,21;1:20-21.*

அதை ஆமோதித்தவர்கள் தானியேலின் நண்பர்கள். தானி. *3:16-18*; அதை வழி மொழிந்தவன் அப்போஸ்தலனாகிய பவுல். அப். *20:22-24; 1* கொரி. *4:9-13, 16.*

"...உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்" ரோ.*5:3-5; 8:28.* ©

எமது வெளியீடுகள்

1. ஆதியாகமத்தின் அணங்குகள்
2. விவிலியத்தின் வீராங்கனைகள்
3. ரூத்
4. குணசாலியான ஸ்திரீ
5. விசுவாசியின் வீடு
6. மணமக்களுக்குப் பரிசு
7. மாரியும் மழையும்
8. திருமறையில் பெயரும் பொருளும்
9. பெண்ணே நீ ஒரு புறா
10. மறையில் மனைவியர்
11. நற்செய்தி நூல்களில் நங்கையர்
12. கிறிஸ்தவ உக்கிராணத்துவம்
13. எலியா
14. மோசே
15. எலிசா
16. பெந்தெகொஸ்தே அனுபவம்
17. சீமோன் பேதுரு
18. பன்னிரு சீஷர் 1
19. பன்னிரு சீஷர் 11
20. கல்யாணம் வரை காத்திரு
21. லேவி என்னப்பட்ட மத்தேயு
22. நூறு பிரசங்கங்கள்
23. விண்ணவர் விரும்பும் விண்ணப்பம்
24. அந்நிய பாஷை
25. ஞானஸ்நானம்
26. திரித்துவம்
27. பரிசுத்த ஆவி
28. ஆவியின் கனி
29 ஆவியின் சின்னங்கள்
30. கொள்கை விளக்கங்சள்
31. இயேசுவின் இரண்டாம் வருகை
32. ஆபிரகாம் ஓர் அவிசுவாசி
33. கருத்துள்ள நூறு கதைகள்
34. உணர்த்தும் நூறு உதாரணங்கள்
35. பால்ராஜ் அதிசயமணியின் பத்துப் பிரசங்கங்கள்
36. ரோமர் விளக்கவுரை
37. அனுதினம் ஆண்டவருடன்
38. கர்த்தருடைய சித்தத்தைக் கண்டுபிடிப்பதெப்படி?

39. முதன்மையில் முதலீடு
40. மாண்புமிகு மனைவி
41. கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கை
42. யோசுவா பரம்பரை
43. யோசுவா விளக்கவுரை
44. வாலிப வயதினிலே
45. பரிசுத்தம்
46. நாகமான்
47. லேவியனாகிய பானபா
48. கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்
49. இரட்சிப்பின் நிச்சயம்
50. அருட்பணிக்கு அறைகூவல்
51. சீஷன்
52. பரலோகத்தின் படிகள்
53. மங்களம் செழிக்க
54. இயேசு விரும்பும் இல்லறம்
55. பால்ராஜ் அதிசயமணியின் பிரசங்கக் குறிப்புக்கள்
56. பால்ராஜ் அதிசயமணியின் பொன்மொழிகள்
57. பால்ராஜ் அதிசயமணியின் பதில்கள்
58. பண்டிகைப் பாடல்கள்
59. பெரிய வெள்ளி ஆராதனை முறைமை
60. ஜெபக்கூட்டக் கீதங்கள்
61. சிலுவை மொழிகள்
62. சிலுவை நிழலில்
63. பிதாவே உம்முடைய கைகளில்
64. கணவனும் மனைவியும்
65. எழில்மிகு எஸ்தர்
66. கிறிஸ்துவைப் பிரதிபலியுங்கள்
67. பிரசங்கக் கதைகள்
68. விவிலிய விளக்கம் பாகம் 1-10
69. திருமறைக் கைந்நூல்கள் பாகம் 1-8
70. நன்மையில் நன்றி ! துன்பத்தில் துதி!!
71. பூரணச் சிறப்புள்ள பெண்மணி
72. நிர்வாகி நெகேமியா
73. யோனாவின் விளக்கவுரை
74. பாதிரி மந்தைக்கு மாதிரி
75. சுத்த மனசாட்சி

76. Sinners and Winners
77. You Have Etemal LiFe
78. Joshua
79. Scriptural Names and their Meanings
80. The Rain and the Snow
81. Wait till your Wedding
82. Foundations for Faith
83. Outlines and Overviews
84. Wit and wisdom
85. Inspiring Illustrations
86. Edifying Illustrations
87. Stories for Sermons
88. Striking Statements
89. Selected Sermon Sketches
90. Personal Evangelism
91. The Power of Prayer
92. The Christian Home
93. Christian Giving
94. Sin is not Fun
95. Arresting Anecdotes
96. Beware of False Prophets
97. Jesus Reigns in the Desert
98. Guard your Heart
99. Second Coming of Jesus
100. Seven Judgements
101. A Commentary on Job

(ஆயுள் நன்கொடை ரூ. 10,000 (அயல்நாடுளில் S 1000) அனுப்பி, வெளியிடப்பட்ட, வெளியிடப்படவிருக்கும் எமது நூல்கள் அனைத்தையும் கீழ்க்கண்ட முகவரியில் பெற்றுக் கொள்ளுங்கள்)

My Manna எனும் இலவச ஆங்கில மின்னஞ்சல் தியானம் வாரந்தோறும் அனுப்பிவருகிறோம்! வேண்டியவர்கள் உங்கள் முகவரிகளைக் கீழ்க்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

A/103 Green View, Patel Complex, Mira Gaon,
Mumbai-401104, India. Tel.: +91 9969637077
www. pam-books.blogspot.com
Email: pambooks@yahoo.com

பாரத்தைப்
பகிர்ந்துகொள்கிறேன்...

இறையருட் பணிகளிலொன்று இலக்கியப்பணி!

இது-

திருச்சபையைக் கட்டும் ஓர் திருப்பணி!!

இதனை அறிந்து வாழும் இயேசுவின் குடும்பத்தினரோடு என் இதயத்தைப்பகிர்ந்து கொள்கிறேன்.

கர்த்தருடைய கிருபையால் புத்தகங்கள் ஏராளம் பிரசுரித்து, சபைக்கும் சமுகத்திற்கும் வாணாட்களில் வழங்க வேண்டுமென்பது என் வாஞ்சை! இது காறும் நூறு நூல்களை வெளியிட்டிருக்கிறோம்.

பணவசதியின்மையால் இன்னும் நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் பிரசுரிக்க முடியா நிலையில் கையெழுத்து வடிவத்திலேயே காத்திருக்கின்றன; இரண்டாம் பதிப்புச் செய்ய இயலாத நிலையிலும் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட பல நூல்கள் தீர்ந்துவிட்டன.

ஒரு நூல் அச்சாகச் சுமார் ரூ. 30000 வரைச் செலவாகும்

இந்த ஊழியத்தில் எங்களோடு பங்குபெற, உங்களை அன்புடன் இயேசுவின் நாமத்தில் அழைக்கிறோம். கர்த்தருடைய பாதத்தில் குடும்பமாக ஜெபித்து எங்களுக்கு எழுதுங்கள்.

ஆண்டவர் உங்களுக்குத்தரும் ஆசீர்வாதங்களில் ஒரு பகுதியை இந்த ஊழியத்திலும் பகிர்ந்துகொள்வீர்களென்றால், இலக்கியப்பணி வளரும்; இயேசுவின் நாமம் மகிமைப்படும்; இடங்கொள்ள ஆசீர்வாதம் உங்கள் இல்லங்களில் பெருகும்.

நீங்களும், நாங்களும் சேர்ந்து இந்த இலக்கியப் பணியை இன்னும் சிறப்பாக ஆற்றுவோம்.

"நீர் செலுத்தும் காணிக்கைகளையெல்லாம் அவர் நினைத்து உமது சர்வாங்க தகனபலியைப் பிரியமாய் ஏற்றுக்கொள்வாராக. அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக!" சங். 20:3-4.

உங்களது-

அன்றாட ஜெபம், ஆலோசனை, ஆதரவு ஆண்டவர் நாமத்தில் தேவை! ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக; ஆமென்!!

கிறிஸ்தவ இலக்கிய ஊழியத்தில்

பால்ராஜ் அதிசயமணி

நற்றமிழ் நடையில் நறுக்குத்தெறித்தாற்போன்ற சொற்களில் எதுகை மோனை நயத்துடன் இலங்கும் யோபு சரித்திரத்தின் விளக்கவுரை இது.

ஆயருக்கும், அருளுரையாளருக்கும், திருமறை மாணவருக்கும், திருப்பணியாளருக்கும் தெளிதேன் விருந்தாக்கும் திருமறைக் கைந்நூல் இது.

திருமறைக் கல்விக்கும், தியானத்திற்கும் இத்திருமறை ஆராய்ச்சி நூலைத் திருச்சபைக்குத் தருபவர் அருள்திரு அறிவர் பால்ராஜ் அதிசயமணி ஆவர்.

இந்திய மெதடிஸ்ட் சபையில் இருபத்து மூன்றாண்டுகள் இறைப்பணியாற்றி இந்நாட்களில் தேசங்களிலும் தீவுகளிலும் திருச்சபைகள், அருட்பணிமாநாடுகள், திருமறைக் கல்லூரிகள், தியானக் கருத்தரங்கங்களில் திருப்பணியாற்றிவருபவர் இவர். நூறு நூற்களுக்கு மேலாக எழுதிய நூற்றுக்கதிபதி அவர்

அன்னாருடைய துணைவியார் திருமதி. ஜெயசெல்வி பால்ராஜ் அவர்களும் தேவ மகிமைக்கெனத் திருத்தொண்டாற்றுபவர்; திறமைமிக்க எழுத்தாளர். இத்தம்பதியினருக்கு மூன்று பிள்ளைகளும் மூன்று பேரப்பிள்ளைகளுமுண்டு.

PamBooks